# வானவில்

# VAANAVIL

| இதழ்126 | ஆனி | 2021 |
|---|---|---|
| ISSUE 126 | JUNE | 2021 |


# இடதுசாரி இயக்கம் மீண்டும் மீள் எழுச்சி பெற வேண்டும்!



இலங்கை இன்று முன்னொருபோதும் இல்லாத வகையில் பல நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்துள்ளது. அவற்றை பின்வருமாறு வரிசைப்படுத்தலாம்:

○ அமெரிக்காவினதும் அதன் கூட்டாளிகளான மேற்கு நாடுகளினதும் மிரட்டல்கள்.

○ இலங்கையின் மிக நெருங்கிய அயல்நாடான இந்தியாவின் அழுத்தம்.

○ உள்நாட்டில் இனவாத – மதவாத சக்திகளின் தேசிய ஐக்கியத்துக்கு எதிரான நடவடிக்கைகள்.

○ விலைவாசி உயர்வும் வேலையில்லாத் திண்டாட்ட அதிகரிப்பும்.

○கொரோனா நோயின் வேகமான பரவல்.

○ சுற்றுச்சூழல் பாதுகாப்பின்மை.

○ எதிர்க்கட்சிகளும் ஊடகங்களும் இணைந்து மக்கள் மத்தியில் பரப்பி வரும் பொய்யான செய்திகளும் வதந்திகளும்.

○ ‘அரச சார்பற்ற நிறுவனங்கள்’ என்ற பெயரில் மேற்கத்தைய நாடுகளின் பணபலத்தில் செயல்படும் அமைப்புகளின் நாசகாரச் செயல்கள்.

இப்படி இன்னும் பல சக்திகளின் செயல்பாடுகள்.

இந்த சக்திகள் இலங்கை சுதந்திரமடைந்த நாள் முதல் பலவிதமான முற்போக்கு விரோத, தேசத்துரோகச் செயல்பாடுகளில் ஈடுபட்டு வந்துள்ளன.

குறிப்பாக 1958இல் ஏற்படுத்திய இனவன்செயல், 1959இல் பண்டாரநாயக்கவை கொலை செய்தமை, 1962இல் திருமதி சிறீமாவோ பண்டாரநாயக்க தலைமையிலான அரசாங்கத்தைக் கவிழ்க்க மேற்கொள்ளப்பட்ட இராணுவச் சதி, 1964இல் பத்திரிகை மசோதாவுக்கு எதிராகச் செயற்பட்டு சிறீமாவோவின் அரசைக் கவிழ்த்தமை, 1971இல் ஜே.வி.பி. இயக்கத்தின் மூலம் சிறீமாவோ தலைமையிலான மக்கள் முன்னணி அரசைக் கவிழ்க்க மேற்கொள்ளப்பட்ட ஆயுதக் கிளர்ச்சி, 1977, 1981, 1983 ஆம் ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட தமிழ் மக்களுக்கெதிரான இனவன்செயல்கள் என்பனவற்றைக் குறிப்பிடலாம். இந்தச் செயல்கள் எல்லாவற்றையும் உள்நாட்டு – வெளிநாட்டு பிற்போக்கு சக்திகள் இணைந்தே அரங்கேற்றியுள்ளன.

ஆனால் இவை எல்லாவற்றையும் விட உள்நாட்டு இனவாத சக்திகளைப் பயன்படுத்தி வெளிநாட்டு சக்திகள் உருவாக்கிய இனவாத யுத்தமே வரலாற்றில் நீண்டகாலம் அதாவது 30 வருடங்கள் நீடித்து நாட்டை நாசமாக்கி சின்னாபின்னப்படுத்தியது. யுத்தத்தை நிறுத்துவதற்கு சமாதான வழிகளிலும், போர் வழியிலும் எடுத்த முயற்சிகள் எல்லாவற்றையும் இந்த சக்திகள் தொடர்ச்சியாகச் சீர்குலைத்து வந்தன.

இந்த நிலைமையில்தான் 2009இல் ஜனாதிபதியாக இருந்த மகிந்த ராஜபக்ஸ தலைமையிலான அரசாங்கம் உறுதிமிக்க நடவடிக்கை எடுத்ததின் மூலம் பிரிவினைவாத பாசிச புலிகளை அழித்து யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வந்தது.

ஆனால் மகிந்த தலைமையிலான அரசு புலிகளை அழித்து போரை முடிவுக்கு கொண்டு வந்ததை உள்நாட்டிலிருந்த சிங்கள – தமிழ் இனவாத சக்திகளும், அவர்களது மேற்கத்தைய எஜமானர்களும் அறவே விரும்பவில்லை. எனவே இந்த சக்திகள் மீண்டும் கூட்டுச் சேர்ந்து தற்போதைய அரசாங்கத்துக்கு எதிராகப் பல்வேறு சதி சூழ்ச்சிகளில் ஈடுபட்டு வருகின்றன.

இத்தகைய ஒரு நிலைமை ஏற்பட்டதற்கு இன்னொரு காரணம்,

**தொடர்ச்சி 15ம் பக்கம் பார்க்க…**

# இலங்கை மாணவர்களுக்கு சவாலாக உள்ள இணையவழிக் கல்வி

ஒரு நாட்டின் சகல துறைகளினதும் வளர்ச்சிக்கும் அடிப்படையாகத் திகழ்வது கல்வியே ஆகும். எந்தவொரு சமூகத்தினரும் கற்பதிலிருந்து கணநேரமெனினும் விலகிச் செல்வது என்பது இன்றைய நவீன உலகில் கற்பனை செய்து பார்க்க முடியாததொன்று. ஏனெனில் கற்றலை நிறுத்துவது என்பது, கடிகார முள்ளை அல்லது பூமியின் அசைவை நிறுத்துவதற்கு ஒப்பானது. இதனால் தான் கல்வி கற்றல் தங்குதடையின்றி நிகழ்வதற்கு மனித சமூகம் முன்னுரிமை வழங்கி வருகின்றது. ஆனால் கொரோனா பெருந்தொற்றுக் காரணமாக கடைப்பிடிக்க வேண்டிய சமூக இடைவெளியால் இன்று அதிகம் பாதிக்கப்பட்டிருப்பது கல்வித்துறையே.

சமூகத்திற்கு ஆரம்பக்கல்வியையும் இடைநிலைக்கல்வியையும் வழங்குதலில் பாடசாலைகள் முதன்மைப்பங்கை வகிக்கின்றன. கடந்த ஒன்றரை வருடங்களாக உலகம் கொரோனா பேரிடரில் திணறிக்கொண்டு இருப்பதால் பாடசாலைகள் மூடப்படுவதும் திறக்கப்படுவதுமாக உள்ளன. இதனால் இலங்கை போன்ற பல நாடுகளில் கொரோனா மாணவர்களின் கல்வியிலும் பெருந்தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. இலங்கையில் கடந்த வருடம் மார்ச் 12ந திகதியிலிருந்து (இடையில் இரண்டு மாதங்கள் தவிர்த்து) பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள் உட்பட சகல கல்வி நிலையங்களும் மூடப்பட்டுள்ளன. தற்போது மிகவும் தீவிரமாக கோவிட் வைரஸ் பரவி வருவதால், இவற்றினை இப்போதைக்கு திறக்கும் நோக்கமில்லை எனவும் இலங்கையின் கல்வி அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் அறிவித்துள்ளார்.

கொரோனாவினால் தொடர்ச்சியாக கல்வி நிலையங்கள் மூடப்பட்டிருக்கும் நிலைமையானது மாணவர்களின் கற்கும் ஆர்வத்தை வெகுவாகப் பாதித்து வருகின்றது. அதனால் மாணவர்களைத் தொடர்சியாகக் கற்றலின்பால் வைத்திருப்பதற்காக தொலைக்காட்சி, இணையம் போன்ற சாதனங்களை பயன்படுத்தி வளர்ச்சியடைந்த பலநாடுகளில் கல்வி நடவடிக்கைகள் தொடர்கின்றன. ஆனால் இலங்கை போன்ற வளர்ச்சியடைந்து வரும் நாடுகளில் எல்லோரிடமும் தொலைக்காட்சியோ அல்லது இணைய வசதிகளோ இல்லை.

இணைய வசதியின்றி இணையவழிக் கற்றலில் ஈடுபட முடியாது. இலங்கையில் இணைய வசதிகள் மற்றும் இணைய வேகம் என்பன நகரங்களுக்கும் கிராமங்களுக்கும் இடையில் பாரிய வேறுபாடுகளைக் கொண்டதாகவுள்ளன. உதாரணமாக கொழும்பு போன்ற நகர்ப்புறங்களில் வாழும் மாணவர்கள் இணையத்தின் அனைத்து வசதிகளையும் இலகுவில் பெற்றுக் கொள்ளக் கூடியவர்களாக இருக்கிறார்கள். ஆனால் கிராமப்புறத்து மாணவர்களோ, இணையத்தின் வசதிகளை இலகுவாகவோ குறுகிய காலகட்டத்திலோ பெற்றுக் கொள்ள முடியாத நிலையில் உள்ளனர்.

இணையத் தொழில்நுட்பக்கருவிகள் (Smart Phone, Laptop, Ipad, Computer) மற்றும் இணைய வசதிகள் இல்லாத மாணவர்கள் ஒருபுறமிருக்க, இணைய வழிக்கல்வியை பெற்றுக்கொள்வதில் மாணவர்கள் மேலும் பல சவால்களை எதிர் நோக்குகின்றனர். அன்றாடக் கூலி வேலைகளில் வருமானத்தை ஈட்டும் மாணவர்களின் பெற்றோர்கள் பொருளாதார நிலையில் மிகவும் பின்தங்கியவர்களாக காணப்படுகின்றனர். அவர்களிடம் இணையத்திறன் கொண்ட கைத்தொலைபேசிகள் இருந்தாலும், அவற்றை தொடர்ச்சியாகப் பயன்படுத்துவதற்கான தொலைபேசி இணையக் கட்டணங்களை செலுத்த முடியாத நிலையில் இருக்கிறார்கள்.

இன்றைய நிலையில் இலங்கையில் இணையவழிக் கல்வி என்பது அனைத்து மாணவருக்கும் சமனான வாய்ப்பைத் தோற்றுவிக்காது. வசதியுடையவர்கள் வாய்ப்பை பயன்படுத்தி முன்னேறவும் வசதி குறைந்தவர்கள் பின்தங்கி நிற்கவுமே வழிவகுக்கும். முதலில் வசதியுள்ள, வசதிகுறைந்த அனைத்துத் தரப்பு மாணவர்களுக்கும் இணைய வசதிகள் கிடைக்கும் வாய்ப்பை உருவாக்க வேண்டும். இல்லாவிடின் டபிள்யூ.கன்னங்கராவால் அறிமுகப்படுத்திய அனைவருக்கும் சமத்துவமான இலவசக்கல்வி என்ற எண்ணக்கருவையே இணையவழிக் கல்வி ஆட்டங்காண வைத்துவிடும்.

கல்வி கற்கும் முறைகளில் காலந்தோறும் பல மாற்றங்கள் நிகழ்ந்த வண்ணம் உள்ளன. இலங்கையில் இணையவழிக் கல்வி என்பதற்கான தேவை கொரோனா சமூக முடக்கத்திற்கு பின்னரே உணரப்பட்டது. அதாவது இணையவழிக் கல்வி முறையென ஒன்று இருப்பது அண்மையில்தான் பலருக்கும் தெரிய வந்தது. ஆனால் மேற்கத்தைய நாடுகளிலோ கொரோனா சமூக முடக்கத்திற்கு முன்னரே இணையவழிக் கல்வி முறை பல வருடங்களாக புழக்கத்தில் இருந்தது.

தற்போதைய புள்ளிவிபரங்களின் படி இலங்கையில் கிட்டத்தட்ட 10000 அரசாங்க பாடசாலைகளில் 52 இலட்சம் மாணவர்கள் கல்வி கற்பதற்காக, 235000 ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இதில் 2000 இற்கும் மேற்பட்ட பாடசாலைகளில் இணைய வசதிகள் இல்லை. அத்தோடு பல இலட்சக்கணக்கான மாணவர்களிடம் இணையவழிக் கல்விக்கான தொழில்நுட்பக்கருவிகள் எதுவுமில்லை. இதனால் 60 வீதமான மாணவர்கள் கல்வி எதுவும் பெறாத நிலையிலேயே உள்ளனர்.

இதுவரையில் இலங்கை பாடசாலை மாணவர்களுக்கு இணையவழியில் மேற்கொள்ளப்பட்ட கற்பித்தல் நடவடிக்கை வெற்றியளிக்கவில்லை என்பது அரசாங்க புள்ளிவிபரங்கள் ஊடாகவும் தெரியவந்துள்ளது. எனினும் எதிர்காலத்தில் தொழில்நுட்பங்களின் அசுர வளர்ச்சியில் தொலைதூர கற்றல் அல்லது இணையவழிக் கல்வியை சமூகத்தின் அனைத்து நிலை மக்களுக்கும் சாத்தியமாக்க இலங்கை கல்வி அமைச்சு இப்போது முதலே திட்டமிட வேண்டும். மேலும் அனைத்து மாணவர்களுக்கும் இணையத்திறன் கொண்ட கருவிகள் கிடைப்பதற்கு அரசு நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும். அப்போதுதான், இணையவழிக் கல்வி முறை என்பது ஏழைக் குழந்தைகளுக்கும் எட்டும் கனியாகும்!

**தொடர்பு மின்னஞ்சல் முகவரி:** sunvaanavil@gmail.com

'வானவில்' இதழுக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்புபவர்களும், இதழ்களைப் பெற்றுக்கொள்ள விரும்புபவர்களும் மற்றும் அனைத்துத் தொடர்புகளுக்கும் மேலுள்ள மின்னஞ்சல் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்:

**இணையத்தளம்:** http://manikkural.wordpress.com/ **இந்த இணையத்தளத்தில் இதுவரையில் வெளிவந்த அனைத்து வானவில் இதழ்களையும் வாசிக்கலாம்.**

# சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் நூற்றாண்டு விழா

**இந்திய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி (CPM) வாழ்த்து**

**சீனக் கம்யூனிஸ்ட் கட்சி நிறுவப்பட்டதன் நூற்றாண்டு விழாவையொட்டி இணைய வழி கருத்தரங்கம் ஒன்று மே 27 அன்று நடைபெற்றது. அதற்கு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் (CPM) கட்சியின் பொதுச் செயலாளர் சீத்தாராம் யெச்சூரி, சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர், ஷிச்சின்பிங்கிற்கு ஒரு சகோதர வாழ்த்துச் செய்தி அனுப்பினார். அது இணையத்தின் மூலமாக கட்சியின் மத்தியக் குழு உறுப்பினர் ஆர்.அருண்குமாரால் வாசிக்கப்பட்டது. அதன் முழு விவரம் வருமாறு:**

சீனக் கம்யூனிஸ்ட் கட்சி நிறுவப்பட்டதன் நூற்றாண்டு விழாக் கொண்டாடப்படும் இத்தருணத்தில், சீனக் கம்யூனிஸ்ட் கட்சிக்கு, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) சார்பில் நான் என்னுடைய இதமான சகோதரத்துவ கம்யூனிஸ்ட் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சீனக் கம்யூனிஸ்ட் கட்சி நிறுவப்படுவதற்கு ஒருசில மாதங்களுக்கு முன்பாக அப்போது இந்தியாவை இரக்கமற்ற முறையில் பிரிட்டிஷ் காலனிய ஆட்சியாளர்களால் ஆட்சி செய்யப்பட்டு வந்த சமயத்தில், இந்தியப் பிரதேசத்திற்கு வெளியே, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி நிறுவப்பட்டது. அதிலிருந்து, இந்த நூற்றாண்டு முழுவதும், சகோதரத்துவ கம்யூனிஸ்ட் கட்சிகள் என்ற முறையில் நம் இரு கட்சிகளுக்கும் இடையே, ஏற்ற இறக்கங்களுடன், சகோதரத்துவ கம்யூனிஸ்ட் உறவுகள் மேற்கொள்ளப்பட்டு வந்திருக்கின்றன.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்), மார்க்சிசம்–லெனினிசம் என்பது ஓர் ஆக்கபூர்வ அறிவியல் (creative science) என்று அடிக்கோடிட்டுக் கூறுவதைத் தொடர்கிறது. இது முற்றிலும் வறட்டுத்தனத்திற்கு எதிரானது. இதனை எல்லாக்காலத்திற்கும் பொருந்தக்கூடிய சூத்திரங்களின் ஒரு தொகுப்பாக எப்போதுமே குறைத்து மதிப்பிட முடியாது. ஓர் ஆக்கபூர்வமான அறிவியல் என்ற முறையில், அதன் புரட்சிகரமான கொள்கைகளையும், மக்களை அடிமைத்தளைகளிலிருந்து விடுவிப்பதற்கான நோக்கங்களையும் கறாராகப் பின்பற்றும் அதேசமயத்தில்,






அது ஒரு குறிப்பிட் சமயத்தில் ஒரு குறிப்பிட்ட நாட்டில் நிலவும் துல்லியமான நிலைமைகளுக்குத் தன்னை தகவமைத்துக்கொள்ள வேண்டியிருக்கிறது. “துல்லியமான நிலைமைகள் குறித்து, துல்லியமான ஆய்வு என்பதே இயக்கவியலின் உயிரோட்டமான சாராம்சம்” (“concrete analysis of concrete conditions is the living essence of dialectics”) என்று தோழர் லெனின் சொல்லியிருக்கிறார்.

சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் சென்ற நூற்றாண்டின் வரலாறு, மார்க்சிச–லெனினிசத்தின் இத்தகைய ஆக்கபூர்வ அறிவியலை அது சீனத்தில் இருந்த துல்லியமான நிலைமைகளுக்கு எவ்விதத்தில் தகவமைத்துக்கொண்டது என்பதற்கான ஒரு சாட்சியமாகும். ரஷ்யப் புரட்சி ஏற்படுத்திய உத்வேகத்திலிருந்தும், அனுபவத்திலிருந்தும் படிப்பினைகளைக் கற்றுக்கொண்டு சீனக் கம்யூனிஸ்ட் கட்சி தங்கள் நாட்டில் தேசிய விடுதலைப் போராட்டத்தின் தலைமையை மார்க்சியத் தத்துவத்தையும், நடைமுறையையும் புதுமையான பாதையில் முன்னெடுத்துச் சென்று வெற்றிகரமாக நிறைவேற்றியது. இது இறுதியாக சோசலிஸ்ட் சீனம், சீன மக்கள் குடியரசு, நிறுவப்படுவதற்கு இட்டுச் சென்றது. இத்தகைய நீண்ட வரலாற்றினூடே, பல்வேறு சோதனைகளை சீனக் கம்யூனிஸ்ட் கட்சி எதிர்கொண்டு அவற்றை வெற்றிகரமாக கடந்து முன்னேறி வந்திருக்கிறது. தான் நடந்தவந்த பாதையில் மேற்கொள்ளப்பட்ட தவறுகள் பல அடையாளங் காணப்பட்டு, சரிசெய்யப்பட்டு, தற்போது சோசலிஸ்ட் சீனத்தை உருக்கு போன்று ஒருமுகப்படுத்திக் கொண்டிருக்கிறது. சமூகக் கொந்தளிப்பு ஏற்படக்கூடிய விதத்தில் கசப்பான போராட்டங்கள் பல நடந்தன. எனினும் அவற்றையெல்லாம் சரிசெய்துகொண்டு, அதுபோன்ற தவறுகள் மீண்டும் ஏற்படாது என்பதை உத்தரவாதப்படுத்திக்கொண்டு சீனக் கம்யூனிஸ்ட் கட்சி வெற்றிகரமாக முன்னேறிக் கொண்டிருக்கிறது.

தவறுகள் அடையாளங் காணப்பட்டு, சரிசெய்யப்பட்டு, அதுபோன்ற தவறுகள் மீண்டும் நிகழாவண்ணம் அழிக்கப்படும் நிலைமைகளை உருவாக்குவதே எதிர்காலத்தை நோக்கி விடுதலைக்கான மக்கள் இயக்கங்களை முன்னெடுத்துச்செல்வதற்கான சாராம்சமாக இருக்கும் என்பதை சீனக் கம்யூனிஸ் கட்சியின் அனுபவம் உறுதிப்படுத்தி இருக்கிறது.

இத்தகைய புதிய கண்டுபிடிப்புகளின் மூலமாகவும், சுய–விமர்சன மதிப்பீடுகள் மற்றும் சரிசெய்தல் மூலமாகவும், சீனக் கம்யூனிஸ்ட் கட்சி 1978இல் ஒரு துணிச்சலான சீர்திருத்தங்களின் பாதையில் இறங்கியது. இவற்றின் மகத்தான முடிவுகள் இன்றையதினம் உலகில் உள்ள ஒவ்வொருவராலும் பார்க்கப்பட்டு, ஒட்டுமொத்த உலகத்தையும் புருவத்தை உயர்த்தி ஆச்சர்யப்பட வைத்திருக்கிறது. இவ்வாறு சீனக் கம்யூனிஸ்ட் கட்சி மேற்கொண்ட சீர்திருத்தங்கள், மார்க்சிச–லெனினிசத்தின் புரட்சிகர சித்தாந்தங்களைப் பின்பற்றுவோருக்கு வழிகாட்டும் என்றும், சோசலிசத்தை பலவீனப்படுத்தி, அழித்திட வேண்டும் என்பதற்காக கிடைத்திடும் ஒவ்வொரு வாய்ப்பையும் பயன்படுத்திடும் சோசலிசத்தின் எதிரிகளுக்கு எவ்வித சந்தர்ப்பத்தையும் அளிக்காது என்றும் நாங்கள் உறுதியாக நம்புகிறோம். இவ்வாறு சீர்திருத்தங்களை சீனக் கம்யூனிஸ்ட் கட்சி மேற்கொண்டுவந்த கடந்த பல பத்தாண்டுகளில், மக்கள் சீனக் குடியரசைக் குறி வைத்து சோசலிசத்தினை அரித்துவீழ்த்திவிட வேண்டும் என்ற நோக்கத்துடன் ஏகாதிபத்தியத்தால் மேற்கொள்ளப்பட்ட

அனைத்து தாக்குதல்களையும், சீனக் கம்யூனிஸ்ட் கட்சி வெற்றிகரமாக எதிர்த்து முறியடித்தது. கோவிட்–19 கொரோனா வைரஸ் தொற்றுக் காலம் முடிவடைந்த பின்னர் ஏகாதிபத்திய சக்திகள் தங்கள் நலனுக்கேற்ற விதத்தில் உலகை மாற்றியமைத்திட முயலும்போது இவர்களுக்கு எதிரான வர்க்கப் போராட்டங்கள் தொடரும். இத்தகைய ஏகாதிபத்தியத்தின் சூழ்ச்சிகளை முறியடித்திட சீனக் கம்யூனிஸ்ட் கட்சி மேற்கொள்ளும் முயற்சிகள் அனைத்திலும் அது வெற்றி பெற இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறது.

இயல்பாகவே மனிதாபிமானமற்ற முதலாளித்துவம், மனிதகுல சுரண்டலுக்கு அப்பாற்பட்டதாக இருக்க முடியாது என்றும், இதனுடைய நெருக்கடிகளிலிருந்து அதனால் வெளிவரமுடியாது என்றும் கூறிவந்த மார்க்சிச–லெனினிசப் புரிதலை இன்றைய உலகம் உறுதிப்படுத்தி இருக்கிறது. அதன் நோக்கமே கொள்ளை லாபம் ஈட்டுவதுதான். எனவே அது எப்போதும் தன் சுரண்டலைத் தீவிரப்படுத்திக்கொண்டே இருக்கும். முதலாளித்துவம், தான் உருவாக்கிய பொருளாதார நெருக்கடியிலிருந்து, குறிப்பாக 2008க்குப்பின் அதனால் உருவான பொருளாதார மந்தத்திற்குப் பின்னர், அதனால் வெளிவரமுடியாமல் திண்டாடிக் கொண்டிருப்பதை 21ஆம் நூற்றாண்டின் முதல் இருபதாண்டுகள் காட்டியிருக்கின்றன. உலகப் பொருளாதாரம் பொருளாதார மந்தத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்த நிலையில், கோவிட்–19 கொரோனா வைரஸ் பெருந்தொற்று வந்து, ஏற்கனவே தத்தளித்துக் கொண்டிருந்த உலகப் பொருளாதாரத்தை மேலும் பேரழிவுக்கு இட்டுச் சென்றது. சர்வதேச நிதி மூலதனத்தால் தலைமை தாங்கப்படும் ஏகாதிபத்திய நவீன தாராளமய உலகமயம் இதற்குத் தீர்வு அளிக்கமுடியாது தன் ஒட்டுமொத்த திவால் தன்மையைக் காட்டிக்கொண்டிருக்கிறது.

மக்கள் சீனக் குடியரசு, கோவிட்–19 கொரோனா வைரஸ் தொற்றைச் சமாளித்துக் கட்டுப்படுத்தி, சமூகத்தையும் பொருளாதாரத்தையும் தேவைப்படும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மூலமாக மீளவும் வளர்ச்சிப் பாதையில் முன்னெடுத்துச் சென்று உலகத்திற்கு முன்மாதிரியாகத் திகழ்ந்து, முதலாளித்துவ அமைப்பு முறையைவிட சோசலிச அமைப்பு முறையே உன்னதமானது என்று நிலை நிறுத்தி உலகத்திற்கு முன்மாதிரியாகத் திகழ்ந்து கொண்டிருக்கிறது.

சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் முன்முயற்சியின் காரணமாகத்தான் சீனா 2020இல் வறுமையை முற்றிலுமாக ஒழித்துக்கட்ட முடிந்தது, ஒவ்வோரு ஆண்டும் பல லட்சக்கணக்கான வேலைகளை உருவாக்கி வேலையில்லாத் திண்டாட்டத்தைக் குறைத்தது, தன்னுடைய சுகாதாரப் பாதுகாப்பு அமைப்புமுறையை வலுப்படுத்தியிருக்கிறது. உலகத்தரம் வாய்ந்த உள்கட்டமைப்பு வசதிகளையும், கல்வி நிறுவனங்களையும் கட்டி எழுப்பியிருக்கிறது. சீனா, அறிவியல் மற்றும் தொழில்நுட்பங்களின் ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சிக்காக செய்திட்ட முதலீடுகளிலிருந்து இப்போது பலாபலன்களை அறுவடை செய்துகொண்டிருக்கிறது. சமத்துவமின்மையையும் ஊழலையும் ஒழித்துக்கட்ட நீங்கள் மேற்கொண்ட முயற்சிகளும், மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தியிருப்பதும் மிகவும் பாராட்டத் தக்கதாகும்.

உங்களுடைய வெற்றிகளைப் பாராட்டும் அதே சமயத்தில், நீங்கள் உங்கள் தவறுகளை சுயவிமர்சனரீதியாகத் திருத்திக் கொண்டுள்ள அதே சமயத்தில், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்), தன்னுடைய புரட்சிகர வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதுடன், 2049 வாக்கில் ஒரு 'நவீன சோசலிச நாடாக மிகவும் செழுமையான, வலிமையான, ஜனநாயக ரீதியாகவும், கலாச்சார ரீதியாகவும் முன்னேறிய நாடாகவும் நல்லிணக்கமுள்ள நாடாகவும்' கட்டி எழுப்புவதற்கான உங்களுடைய இறுதி லட்சியத்தை எய்துவதற்கும் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறது.

சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையின்கீழ், மக்கள் சீனக் குடியரசு, தெற்காசியா மற்றும் உலகின் அமைதிக்கும் ஸ்திரத்தன்மைக்கும் பங்களிப்புகளைச் செய்துகொண்டு, அண்டை நாடுகளுடன் சுமுகமான உறவுகளை ஒருங்கிணைத்துக் கொண்டு, ஓர் அமைதியான வெளியுறவுக் கொள்கையைப் பின்பற்றும் என இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) நம்புகிறது.

வரவிருக்கும் காலங்களில் நம் இருகட்சிகளுக்கும் இடையேயான சகோதரத்துவ கம்யூனிஸ்ட் உறவுகள் நம் நாடுகளின் மக்களுக்கும், அரசாங்கங்களுக்கும் இடையே உறவுகளை மேம்படுத்துவதற்குப் பங்களிப்புகளைச்செய்துகொண்டு வலுப்படுத்துவது தொடரும் என்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) நம்புகிறது.

**மார்க்சிசம்–லெனினிசம் நீடூழி வாழ்க!**
**சீனக் கம்யூனிஸ்ட் கட்சி நீடூழி வாழ்க!**
**ஏகாதிபத்தியம் ஒழிக!**

**–தமிழில்: ச.வீரமணி**

---


**9ம் பக்கத்தொடர்ச்சி...**

ஏனெனில், பண்டாரநாயக்க தனிச்சிங்களச் சட்டத்தை கொண்டுவந்தபோது, சிங்களத்துடன் தமிழையும் ஆட்சிமொழியாக்கும்படி இடதுசாரிக் கட்சிகள் இரண்டும் அரசாங்கத்தை வலியுறுத்தின. வலியுறுத்தியதுடன் நின்றுவிடாது, தமிழையும் ஆட்சி மொழியாக்கக்கோரி கம்யூனிஸ்ட் கட்சி இயக்கமொன்றை மக்கள் மத்தியில் ஆரம்பிக்க முனைந்தது. அதன்பொருட்டு யாழ்ப்பாணம் மாநகர சபை மண்டபத்தில் கூட்டமொன்றைக் கூட்டி இதர அரசியல் கட்சிகளுக்கும் அழைப்பு விடுத்தது.

இந்த அழைப்புக்கு பதிலளித்த தமிழ் காங்கிரஸ் தலைவர் ஜீ.ஜீ.பொன்னம்பலம், 'ஆங்கிலமே தொடர்ந்தும் ஆட்சி மொழியாக இருக்க வேண்டும்' என்பதே தனது கட்சியின் கொள்கை என்பதால், கம்யூனிஸ்ட் கட்சி கூட்டிய கூட்டத்தில் கலந்து கொள்ள முடியாது என மறுத்துவிட்டார். பொன்னம்பலத்தின் முடிவை அறிந்த தமிழரசுக் கட்சியினர், 'தமிழ் காங்கிரஸ் கலந்து கொண்டால் மட்டுமே நாமும் கலந்து கொள்வோம்' எனத் தெரிவித்து அவர்களும் கூட்டத்தில் கலந்து கொள்ள மறுத்துவிட்டனர்.

இப்படிச் சொன்ன இந்த இரு தமிழ் கட்சியினரும்தான், வெளியே 'ஐயோ சிங்கள ஆட்சியாளர்களால் தமிழ் பறிபோகிறது' எனக் கூச்சல் போட்டு தமிழ் மக்களிடம் தொடர்ந்தும் வாக்கு வேட்டையாடி வந்துள்ளனர். எதையும் ஆராய்ந்து பார்க்காமல் கண்ணை மூடிக்கொண்டு ஆதரவளிக்கும் தமிழ் மக்கள் இந்த இரு கட்சிகளினதும் மாய்மாலத்தைப் புரிந்து கொள்ளாமல் தொடர்ந்தும் அவர்களுக்கு ஆதரவளித்து வருவதுதான் மிகப்பெரிய சோகம்.

# போராட்டமும் வரலாறும்



**சா**திப் பிரச்சினை பற்றிப் பேசுகின்ற சிலர் பழந் தமிழிலக்கியங்களிலே ஆங்காங்கு காணப்படும் சில 'மனிதாபிமான'க் கருத்துக்களைச் சுட்டிக்காட்டி, பெரும் பெரும் புலவர்கள் எல்லாம் சாதிமுறையை எதிர்த்தே வந்திருக்கின்றனர் என்று தமக்குத் தாமே ஒருவகையான மனஅமைதியைத் தேடிக்கொள்வதைக் காணலாம். சங்கப் புலவர்களிலிருந்து இராமலிங்கர் வரை "சாதி சமயச் சழக்குகளை" கண்டித்துப் பாடியவர் பலர் உள்ளனர் என்பது உண்மையே. ஆனால் அக்கண்டனத்தின் தன்மையே கூர்ந்து நோக்கத்தக்கது. சாதி முறை கூடாது என்பதை எடுத்துக் கூறுவதற்குப் பெரும்புலமையோ, பேரறிவோ தேவையில்லை. நிலைமையை மாற்றுவதற்கு ஏற்ற வழிவகைகளைக் கூறுவதிலேயே முந்தையோர் பெரிதும் வேறுபடுகின்றனர்.

"கொடிது கொடிது வறுமை கொடிது" என்று ஔவைக் கிழவியும் பாடினாள். ஆனால் வறுமை சமுதாய நிதர்சனமாக இருந்து வந்திருக்கிறது. "இல்லை என்ற சொல்லை உலகில் இல்லை என்ன வைப்பேன்" என்று பாரதி முழங்கியபோது வறுமை வெறும் வருணணையாக அன்றி மாற்றப்பட வேண்டிய பொருளாகக் காட்சி தந்தது. சாதி முறையும் அவ்வாறுதான்.

மனிதனை மனிதன் அடக்கி அடிமைப்படுத்தும் எல்லாவிதமான முயற்சிகளும் பல்வேறு காலங்களில் போராட்டங்களினாலேயே மாற்றப்பட்டுள்ளன என்பது வரலாற்று உண்மை. மனமாற்றத்தால் அடிப்படை மாற்றம் எதுவும் ஏற்படாது. மந்திரத்தால் மாங்காய் விழாததுபோல, சாதிக்கொடுமையைப் பற்றியும் எமது பழைய இலக்கியங்களிலே எடுத்துரைத்தவர்கள் ஆகக்கூடிய பட்சம் மனமாற்றத்தையே எதிர்பார்த்தனர். உடையவனும் இல்லானும் இருந்த – வணிக வர்க்கச் செல்வாக்கு ஓங்கிய சமுதாய அமைப்பிலே – வறியார்க்கு ஒன்று ஈவது பற்றி விரிவாக எடுத்துரைத்துப் 'பகுத்துண்டு பல்லுயிர் ஓம்பும்' இணக்க முறையை வகுக்க முயன்றார் வள்ளுவர். வறுமையை அதிகப்படவிடாது அதனைக் குறைக்க முயன்றால் செல்வனுக்கு அதுவே உதவியாயமையும் என்று உபதேசம் பண்ணினார் வள்ளுவர். 'அறம்' உரைத்த வள்ளுவர் எவர் பக்கம் நிற்கிறார் என்பது வெளிப்படை. ஆனால் சமூக சிந்தனையாளனான அவர் வர்க்கப் போராட்டத்தைத் தடுக்கவும் – கூர் மழுங்கச் செய்யவும் – முயன்றார்.

## அம்பலத்தான்

பிறப்பால் பெறும் பேதத்தை பேச்சளவில் மறுத்த பொய்யா மொழியார் செய்தொழில் வேற்றுமையை அடிப்படையாக ஏற்றுக்கொண்டு, மனிதரிடையே ஏற்றத்தாழ்வை அமைத்து அமைதி கண்டார். வள்ளுவர் புத்துலகு அமைக்க முயன்றவர் அல்லர். பழைய உலகை புத்திசாலித்தனமாக நடக்கும்படி புத்தி கூறியவரே. தார்மீக புனருத்தாரண இயக்கத்தினர், முதலாளிக்கும் (முதலாளித்துவம் அல்ல) தொழிலாளிக்கும் நட்புறவும் நல்லெண்ணமும் உருவாக வேண்டும் எனப் பிரச்சாரம் செய்து கலைவடிவங்களில் அக்கருத்தை முக்கியப்படுத்துவது போலவே, தனது காலத்து சமூக முரண்பாட்டிற்கு "அமைதியான" நிவாரணம் காண முயன்றார் வள்ளுவர். ஆனால் அவர் அதில் எள்ளளவும் வெற்றிபெறவில்லை என்பது சரித்திரச் செய்தி.

அருளும் அன்பும் ஆருயிர் ஓம்பலும் வள்ளுவர் தனது வர்க்கத்தவராகிய வணிகருக்குக் கூறியவை. நேர்மையாகப் பொருள் கொடுத்து நீதியாகப் பணம் பெறுமாறு வள்ளுவர் இடித்து இடித்துக் கூறினார். ஆனால் வாய்ச்சொல்லால் வர்க்க இயல்புகள் மாறிவிடுமாயின் வரலாறே வேறாயிருக்குமே. வள்ளுவர் பலவாறு கூறி எச்சரிக்கை செய்திருக்கவும் வணிக வர்க்கம் தனது ஈவிரக்கமற்ற சுரண்டலைத் தொடர்ந்து நடத்தியதை சிலப்பதிகாரம், மணிமேகலை முதலிய காப்பியங்களும் பிற நூல்களும் எமக்கு ஓரளவு காட்டுகின்றன. அச்சுரண்டலையும் அதன் விளைவாகச் சமுதாயத்தில் பரவலாகக் காணப்பட்ட துன்ப துயரங்களையும் எதிர்த்து மூண்டெழுந்ததே 'பக்தி இயக்கம்' எனப்படும் வர்க்கப் போராட்டம். தமது முன்னேற்றப்பாதையில் அடியெடுத்துவைக்க பெருநிலக்கிழாரும், பிரபுக்களும் சைவம் என்ற பெயரில் "ஆதரித்துத் தின்றுழலும் புலைய"ரையும் உடன் காட்டி – அணிதிரட்டி, எதிர் வர்க்கத்தினரின் "தலையை அறுக்கும்" அறத் தொழிலைச் செய்ய முற்பட்டனர்.

நாயன்மாரும் ஆழ்வாரும் சாதி முறைமையை எதிர்ப்பவராயினர். இறைவன் முன் யாவரும் சமம் என்று குரல் எழுப்பினர். வேடர் முதல் பறையர் வரை இறை பக்தர்களாயின் ஒன்றே என்ற கருத்து உருவாகியது. ஆனால் இதே வைதிக சமயங்கள் தனியுரிமையும் சிறப்புச் செல்வாக்கும் பெற்று விளங்கிய சோழப் பெருமன்னர் ஆட்சியிலே முன்னிருந்ததைவிடச் சாதி முறை மிகக் கடுமையாக அனுட்டிக்கப்பட்டது. அவரவர் யோகம் பாவத்துக்கேற்பவே சாதியும் வாழ்க்கைத் தகுதியும் என்று சமாதானம் கூறப்பட்டது. இறைவன் யாவரும் சமம் என்ற குரல் மறைந்தது. உயர்ந்த குலமக்களே தெய்வங்களாக உலாவினர். தெருக்களிலே 'உலாப்பவனி' வந்த மானிட மன்னன் இறைவன் ஆனான். எனவே பக்திமான்கள் இழித்துப்பாடிய சாதி முறை, சாதிச் சழக்கு சமூக நிறுவனத்தினரின் கூறுகளில்

**தொடர்ச்சி 15ம் பக்கம் பார்க்க...**

# புரட்சியாளர் சே!

உலக நாடுகளின் வரலாறுகளில் போராட்டங்கள் இரத்தம் தோய்ந்த பக்கங்களாகவே உள்ளன. 39 வயதில் சுட்டுக் கொல்லப்பட்ட ஒரு ராஜாளிப் பறவையை நினைவுகூர்வது, நமது ஆன்மாவின் பசிக்கு அமுதத்தையே வார்ப்பது போன்றது.

அந்த ராஜாளிப் பறவை யார்? தென் அமெரிக்க நாடுகளில் ஒன்றான ஆர்ஜென்ரீனாவில் பிறந்த அவர், 'சே' என்று செல்லமாக அழைக்கப்பட்ட சே குவேரா.


சேகுவேராவின் வாழ்க்கை, சாகசங்கள் நிறைந்த சரித்திரம். சேயின் சம்பவங்கள் ஒவ்வொன்றையும் கற்பனை செய்து கணநேரம் பார்த்தால் போதும், நமது இரத்த ஓட்டத்தையே உறைந்து போகச் செய்யும், மயிர்க் கூச்செறிய வைக்கும் வீர தீர விளையாட்டுகளாகும்.

மருத்துவ மாணவராக இருந்தபோதே அவர் ஆர்ஜென்ரீனாவில் தமது ஊரை விட்டுவிட்டு வெளியேறினார். 1950களில் இலத்தீன் அமெரிக்க நாடுகளில் நடந்து வந்த மக்கள் எழுச்சிகளைப் பற்றியெல்லாம் அந்த 17 வயதிலேயே அறிந்து வைத்திருந்தார்.

இலத்தீன் அமெரிக்க நாடுகளில் ஒன்றான பெரு நாட்டில் வாழ்ந்து வந்த புரட்சிவாதி ஹில்டா காடியா அகஸ்டா மூலமாக மார்க்சீயக் கோட்பாடுகளைக் கற்றதோடு, சோசலிசத்தைப் பரப்பவும் சேகுவேரா தன்னை அர்ப்பணிக்கத் திட்டமிட்டார்.

உருகுவே நாட்டின் பத்திரிகையாளர், சே குவேராவைப் பற்றிக் கூறுகையில், அவரை ஓர் அதிபுத்திசாலி என்றும், அவருக்கு உயர் கணிதத்தில் அபார ஞானம் இருந்தது என்றும், சிக்கல் நிறைந்த ஆராய்ச்சிக் கட்டுரைகளைப் படிப்பது அவருக்குப் பிடித்திருந்தது என்றும், தொல்லியல் அகழ்வாராய்ச்சியிலும் ஈடுபாடு காட்டினார் என்றும் குறிப்பிட்டுள்ளது ஒருவிதக் குறைவு நவிற்சிதான்.

அவரோ, பிறவி ஆஸ்துமா நோயாளி. ஆனாலும், அதைப் பொருட்படுத்தாமல் புரட்சிகரச் சிந்தனைகளிலும் செயல்பாடுகளிலும் உற்சாகமாக ஈடுபட்டவர். மருத்துவக் கல்விக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு 17 வயதில் மாணவராக இருந்தபோதே தனது ஊரைவிட்டு வெளியேறினார்.



மருத்துவக் கல்லூரி மாணவனாக இருந்தபோது தன் சொந்த நாடான ஆர்ஜென்ரீனாவில் 4500 கி.மீ. தூரம் மோட்டார் சைக்கிளில் பயணம் செய்து, தமது கிராமங்களைப் பற்றிய புரிதலைப் பெற்றுள்ளார். அவர் கடைசியாகச் சென்ற கார்டோபா நகரில் 'புத்தகத்தில் நமது நாட்டைப் பார்த்தது போதும் – தேசத்தை நேரில் பார்க்கப் புறப்படுவோம் வா' என்று தனது நண்பர் டாக்டர் ஆல்பர்ட்டோவுடன் இணைந்து பயணத்தைத் தொடர்ந்துள்ளார்.

*பெ.சிதம்பரநாதன்*

இருவரும் 8 ஆயிரம் கி.மீ. இந்த இரண்டாம் பயணத்தில் மோட்டார் சைக்கிளில் போனார்கள். அதனைப் பற்றி அவர் எழுதிய நாட்குறிப்பு, 'மோட்டார் சைக்கிள் டயரி' நூல்.

அப்பயணத்தில் ஓர் ஊரில் வீடில்லாத தம்பதிகளைப் பார்க்க நேரிட்டது. அவர்கள் சொன்ன செய்தி, இவர்களை உலுக்கிவிட்டது. போலீஸ்காரர்கள் தங்களைக் கம்யூனிஸ்ட்டுகள் என்று ஊரிலிருந்தே அடித்துத் துரத்தி விட்டனர் என்பது அச்செய்தியாகும். அதிர்ச்சியடைந்த சே குவேரா, முதலாளித்துவத்தின் ஈவு இரக்கமற்ற சுரண்டல் முறையை உணர்ந்தார்.

இதனை எதிர்க்க வேண்டும் என அவருடைய மனம் எரிமலையானது. அங்கிருந்து அதே மோட்டார் சைக்கிளில் சிலி நாட்டின் செம்புச் சுரங்கப் பகுதிகளுக்குப் போனார்கள். அச்சுரங்கத் தொழிலாளர்கள் இரக்கமில்லாமல் சுரண்டப்படுவதைக் கண்டு கோபமடைந்தார்கள். சுரங்கத்தின் மேலாளரிடம் அத்தொழிலாளிகளுக்குக் குடிக்கத் தண்ணீர் தருமாறு கேட்டனர். அந்த மேலாளரோ, எப்போது கொடுப்பது என்று எனக்குத் தெரியும். இப்போது அவர்கள் சாகப் போவதில்லை என்று பதில் கொடுத்தாராம்.

1952களில் ஆண்டஸ் மலைப்பிரதேசத்தில் நிலவிய கொடிய வறுமை பற்றி சே குவேரா அறிந்தபோதுதான் மகத்தான ஒரு போராட்டத்திற்கு மக்களைத் திரட்டத் திட்டமிட்டார். புரட்சிக்கு முதல் தேவை ஆயுதமே என்பதையும் உணர்ந்தார். பின்னர் அவர்கள் பெரு நாட்டிற்குப் பயணமானார்கள். அங்கு அவர்களின் மோட்டார் சைக்கிள் விபத்துக்குள்ளாகி, இருவரும் கீழே விழுந்து காயமடைந்தனர். பிறகு, மோட்டார் காரில் அவர்களின் பயணம் தொடர்ந்தது.

பெரு நாட்டில் உள்ள தொழுநோயாளிகள் மையத்திற்குச் சென்று இருவரும் அங்கு சேவை செய்தனர். அந்நோயாளிகள் தந்த மூங்கில் படகில் அமேசான் நதியில் பயணித்து வெனிசுலா நாட்டிற்குச் சென்று சேர்ந்தனர்.

அங்கேயே அம்மக்களுக்குச் சேவை செய்வதற்காக டாக்டர் ஆல்பர்ட்டோ தங்கி விட்டார். அதனால் சே குவேரா மட்டும் அங்கிருந்து மியாமிக்குப் புறப்பட்டார். அங்கிருந்து தனது தாயாருக்கு எழுதிய ஒரு கடிதத்தில், தென் அமெரிக்க நாடுகளில் அடக்குமுறை அதிகமாக

இருப்பதாகவும் வீதிகளில் எப்போதும் மக்களை அச்சுறுத்தும் துப்பாக்கி ஏந்திய இராணுவத்தினரின் நட மாவட்டங்களைக் கண்டதாகவும், இதற்கு எதிர்வினையாக மக்கள் புரட்சி வெடிக்கும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

மியாமியிலிருந்து புறப்பட்டுப் போய் பாதியில் விட்டு வந்த தனது மருத்துவக் கல்வியை முடித்து 1953 இல் டாக்டராக வெளிவந்தார்.

பின்னர் கௌத்தமாலா நாட்டிற்குப் போனார். அங்கிருந்த அமெரிக்கப் பழ நிறுவனம் ஒன்று, பழங்களைப் போலவே தொழிலாளர்களையும் பிழிந்து வந்ததை அறிந்து, அதற்கு எதிராகப் போராடத் தொடங்கினார்.

அப்போது கௌத்தமாலா அதிபர், அப்பழ நிறுவனத்தின் நிர்வாகத்தை அடக்கும் நோக்கில் விவசாய பூமி முழுவதும் அரசுக்குச் சொந்தமென அறிவித்தார். கௌத்தமாலாவில் சே இருந்தபோது பெரு நாட்டைச் சேர்ந்த பொருளாதார நிபுணர் ஹில்டா என்ற பெண்ணுடன் நேசமும் நெருக்கமும் கொண்டார். இருவரும் திருமணம் செய்து கொண்டனர். அவர்களுக்கு ஒரு மகள். ஆனாலும் விவாகரத்துச் செய்து கொண்டனர்.

பின்னர் அங்கிருந்து சே மெக்சிகோவுக்குப் பயணமானார். மெக்சிகோவில் ஒரு தேநீர்க்கடையில் தான் பிடல் காஸ்ட்ரோ சகோதரர்களைத் தற்செயலாகச் சந்தித்தார். காஸ்ட்ரோ சகோதரர்கள் கியூபா சர்வாதிகாரி பாட்டிஸ்டாவிடமிருந்து தப்பித்து, மெக்சிகோவில் தலைமறைவு வாழ்க்கை வாழ்ந்து வந்தனர். பாட்டிஸ்டா சர்வாதிகாரியைத் தூக்கி எறிவதற்கான திட்டத்தைக் காஸ்ட்ரோ சகோதரர்களுடன் சேர்ந்து சே தான் தீட்டினார்.

மெக்சிகோவிலிருந்துதான் கொரில்லாப் போர் முறைப் பயிற்சியை, சே தனது புரட்சிப் படைக்குத் தந்தார். சர்வாதிகாரி பாட்டிஸ்டாவுக்கு அமெரிக்காவின் ஆதரவு உண்டு. அவரை எதிர்த்து கிரான்மா என்ற கப்பலில் கியூபாவுக்கு 49 புரட்சிப் படையினருடன் இம்மூவரும் புறப்பட்டனர்.

சர்வாதிகாரி பாட்டிஸ்டாவை ஒழிப்பதற்காகக் கியூபாவில் வெடித்த புரட்சியில் பிரதானப் பங்கு வகித்தவர் சே. உயிரைக் காப்பாற்றிக்கொள்ள முயன்ற சர்வதிகாரி பாட்டிஸ்டா அங்கிருந்து தப்பித்து வெளியேறினார்.

1959 இல் புரட்சி அரசு கியூபாவில் ஆட்சியைக் கைப்பற்றியது. பிடல் காஸ்ட்ரோ சே குவேராவுக்குக் கியூபா குடியுரிமை அளித்ததுடன், அவரைக் கியூபா அரசில் தொழில் அமைச்சராகவும் நியமித்தார். தேசிய வங்கியின் தலைவராகவும் ஆக்கினார்.

பின்னர் சே, கொங்கோவில் புரட்சி செய்யத் திட்டமிட்டார். அது எதிர்பார்த்த வெற்றி தரவில்லை. அதனால், 1966 இல் கொங்கோவிலிருந்து திரும்பிய சே, அங்கிருந்து பொலிவியாவில் போராடப் புறப்பட்டார். சி.ஐ.ஏ. உளவு நிறுவனம் இவரைத் தொடர்ந்து கண்காணித்து வந்தது.

பொலிவியாவில் அமெரிக்காவின் பொம்மை ஆட்சியின் இராணுவத்திடம் சே கைதாக நேர்ந்தது. பொலிவியாவில் உள்ள ஒரு கிராமப் பள்ளி வீட்டில் கைதியாகச் சிறை வைக்கப்பட்டார். அவருடன் இருந்த புரட்சிப் படையினரும் அங்கு அடைக்கப்பட்டிருந்தனர்.

சி.ஐ.ஏ. உத்தரவின்படி அமெரிக்க இராணுவத் தளபதி டெரான் என்பவன், சே இருந்த வகுப்பறைக்குள் புகுந்து எந்திரத் துப்பாக்கியால் சே குவேராவைச் சுட்டுக் கொன்றான். சே குவேராவைச் சரியாக அடையாளம் காண, சேயின் இரண்டு கைகளும் துண்டிக்கப்பட்டு அமெரிக்காவுக்கு எடுத்துச் செல்லப்பட்டன.

தென்னமெரிக்க நாடுகள் பலவற்றிலும் சே குவேரா புரட்சித்தீயைக் கொண்டு சென்று, அந்த நாடுகளுக்குப் புதிய விடுதலையை உருவாக்கியதில் பெரும்பங்கு ஆற்றிய அசாதாரணமான மாவீரன்.

முதல் மனைவிக்குப் பிறகு அலைடா மார்ச் என்பவரைத் திருமணம் செய்து கொண்டார். அவர்களுக்கு நான்கு குழந்தைகள். மனைவி, குழந்தைகளுடன் பாசம் மிக்க ஒரு குடும்ப வாழ்க்கை வாழ்ந்து வந்துள்ளார்.

அக்குழந்தைகளில் ஒருவர்தான் டாக்டர் அலைடா குவேரா மார்ச் என்ற சே குவேராவின் மகள். 57 வயதான அப்பெண், மருத்துவராகப் பணியாற்றி வருகிறார்.

அவர் தனது தகப்பனாரைப் பற்றிக் கூறுகையில், அவர் ஒரு சிறந்த எழுத்தாளர் என்றும், தொடர்ந்து எழுதி வந்தவர் என்றும் அவருடைய உரைநடை படிப்பதற்குச் சுவையாக இருக்கும் என்றும் குறிப்பிட்டுள்ளார். அவரது மொத்தப் படைப்புகளும் அவருடைய பெயரில் அமைந்துள்ள மையத்திலிருந்து வெளியாகி வருகின்றன. சே குவேரா தன் வீட்டில் 3 ஆயிரம் நூல்களுக்கு மேல் வைத்திருந்தார். அவர் ஒரு மிகச்சிறந்த புகைப்படக்காரருமாவார் என்றெல்லாம் மகள் டாக்டர் அலைடா கூறியுள்ளார்.

இவ்வாறு, ஓர் அறிவாளியாகவும், துல்லியமான இராணுவத் தாக்குதலுக்குத் திட்டமிடக் கூடியவராகவும் சாகசங்களை நேசிக்கக்கூடியவராகவும், அதே நேரத்தில் தொழில் ரீதியாக ஒரு மருத்துவராகவும், ஓய்வு நேரங்களில் கணிதச் சமன்பாடுகளில் காலத்தைச் செலவழித்து மகிழ்ந்தவராகவும், சே விளங்கியுள்ளார் என்பது அவரைப் பற்றிய சிறப்பான சரித்திரப் பதிவுகளாகும்.

அவருடைய கடைசி நேர வாழ்க்கைக் கட்டம் நம்மைக் கண்கலங்க வைக்கிறது. பொலிவியாவில் ஒரு கிராமப் பள்ளிக்கூட இல்லத்தில் அவரைக் கைது செய்து வைத்திருந்த இராணுவம், சி.ஐ.ஏ.வுடன் தொடர்பு கொண்டு அவரைச் சுட்டுக் கொன்றுவிட்டது.

அதற்கு முன்பு, அந்தப் பள்ளிக்கூடத்தில் பணிபுரிந்து வந்த ஆசிரியரின் மகள் ஜூலியா என்பவள் அந்தக் கைதிக்குக் கடலை சூப் எடுத்துச் சென்ற அப்பெண் கூறுகிறாள், ‘அவர் யார் என எனக்குத் தெரியாது. அக்கைதியின் வலது காலில் இரத்தம் வடிந்து கொண்டிருந்தது. தீராத வலியைத் தாங்கிக் கொண்டு அந்த மனிதன் இருந்துள்ளார் என்று. அழுக்கடைந்த கிழிந்த ஆடைகளில் அவருடைய முகத்தைக் கண்ட ஜூலியா, அந்த மனிதர் பார்ப்பதற்கு அவ்வளவு கவர்ச்சிகரமாக இருந்தார்’ எனக் குறிப்பிட்டுள்ளார்.


அந்த சூப்பைச் சாப்பிட்டு விட்டு, மெல்லப் புன்னகை செய்து, இது அருமையான சூப் என்று அந்த சின்னப்பெண்ணிடம் கூறியுள்ள அந்தக் கைதிதான் சே குவேரா. அது பின்னர்தான் அவளுக்குத் தெரிய வந்தது.

அசப்பில் அந்த அழகான முகத்தைப் பார்த்தவர்கள் அவரை ஏசுநாதர் என்றே குறிப்பிட்டிருக்கிறார்கள் என்றால், சே குவேரா சிறந்த அறிவாளி மட்டுமல்ல, அதற்குச் சமமான அழகானவரும்கூட. அவருடைய முகம் அப்படியொரு ஞானசூரியனாக ஜொலித்திருக்கிறது.

சூப்பைக் கொடுத்துவிட்டுத் தன்

**தொடர்ச்சி 8ம் பக்கம் பார்க்க...**

# வெறுமனே ஒரு சந்திப்பு



**ஜி** 7 (G7) நாடுகளின் உச்சி மாநாட்டையொட்டி கடந்த 16ந் திகதி ஜெனீவாவில் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன், ரஷ்ய ஜனாதிபதி விளாதிமிர் பூட்டினுடனான சந்திப்பையும் நடத்திச் சென்றிருக்கிறார்.

சர்வதேச ஊடகங்களில் இந்த சந்திப்பு பரபரப்புச் செய்தியாக இடம் பெற்றிருந்த போதிலும், இது வெறுமனே ஒரு மரியாதைநிமித்தமான சந்திப்பே தவிர வேறல்ல என்பதாகத்தான் அமைந்திருந்தது. சர்வதேச அரசியலில் அமெரிக்காவும், ரஷ்யாவும் இடைவிடாமல் பரஸ்பரம் எதிரெதிர் துருவங்களில் நின்று காய்களை நகர்த்திக் கொண்டேதான் இருக்கின்றன. பல சந்தர்ப்பங்களில் உலகிற்குபெரும் ஆபத்தை கொண்டு வரும் அமெரிக்காவின் முயற்சிகளை ரஷ்யா முறியடிப்பதும், அதற்கு பதிலடி என்ற பெயரில் ரஷ்யாவுக்கு எதிராக அமெரிக்கா செயல்படுவதும் தொடர்கிறது.

இந்த நிலையில், அமெரிக்கா, ரஷ்யா இடையிலான பதற்றத்தை சற்று தணிக்கும் விதத்தில் இரு நாட்டு தலைவர்கள் இடையிலான சந்திப்பை நடத்திட ஜோ பைடன் விரும்பியிருக்கிறார். அதனை விளாதிமிர் பூட்டினும் ஏற்றுக்கொண்டு சந்தித்திருக்கிறார்கள். கடுமையான மோதல் சூழலில் இப்படிப்பட்ட ஒரு சந்திப்பு நடந்தது வரவேற்கத்தக்கதே.

ஆனால், அமெரிக்காவின் புதிய ஜனாதிபதியான பைடன், அவருக்கு முந்தைய ஜனாதிபதிகளான டொனால்டு ட்ரம்ப் மற்றும் பராக் ஒபாமா ஆகியோருடன் ஒப்பிடும் போது, மிக மிக தீவிரமான ரஷ்ய எதிர்ப்பாளர் ஆவார். அவர் ஏன் ரஷ்ய ஜனாதிபதியுடனான சந்திப்பை விரும்பினார் என்பது கவனிக்கத்தக்கது. உலக அரசியல் அரங்கில் சீனாவும், ரஷ்யாவும் கிட்டத்தட்ட அனைத்து தளங்களிலும் கைகோர்த்து நிற்பது அமெரிக்காவுக்கு அச்சுறுத்தலாகவும், ஏற்க முடியாததாகவும் உள்ளது. ஏதேனும் ஒரு கட்டத்தில் இரு தரப்பினருடனும், சமாதானமாக செல்வது போல காட்டிக் கொள்ள வேண்டிய தேவை அமெரிக்காவுக்கு இருக்கிறது. அந்த தேவைதான் விளாதிமிர் பூட்டினை சந்திக்குமாறு பைடனை தள்ளியிருக்கின்றது.

ஆனால் இந்த சந்திப்புக்குப் பிறகும் அமெரிக்கா – ரஷ்யா உறவுகளில் பெரிய மாற்றம் வந்துவிடப்போவதில்லை. அதனை உறுதிப்படுத்தும் விதமாக அமைந்திருக்கிறது, அடுத்த சில நாட்களிலேயே – ஞாயிறன்று – அமெரிக்க பாதுகாப்பு ஆலோசகர் ஜேக் சுள்ளிவன், ரஷ்யாவுக்கு எதிராக அளித்திருக்கும் பேட்டி. அமெரிக்காவின் எதிர்பார்ப்புகளுக்கு ஏற்ப நடந்து கொள்ளவில்லை என்றால், ரஷ்யா மீதான தடைகள் மேலும் தீவிரமாகும் என்று ஜேக் பேசியிருக்கிறார். இது ரஷ்யத் தரப்பில் கடும் கண்டன அலையை எழுப்பியிருக்கிறது. ஜேக் தனது பேட்டியில் வழக்கம் போல சீனாவுக்கு எதிராகவும் விஷம் கக்கியிருக்கிறார்.

உக்ரைன் விவகாரம், சிரியா விவகாரம், பெலருஸ் பிரச்சனை, மனித உரிமைகள் தொடர்பான பிரச்சனை, சீனாவுடனான ரஷ்யாவின் நெருக்கம், ரஷ்யாவுடனான பிற நாடுகளின் நெருக்கம், கொரோனா பிரச்சனையில் ரஷ்யாவின் ஸ்புட்னிக் தடுப்பூசிக்கு சர்வதேச அரங்கில் கிடைத்த வரவேற்பு உள்பட அமெரிக்காவால் ஏற்றுக் கொள்ள முடியாத – ரஷ்யாவுடன் எந்தவிதத்திலும் சமரசம் செய்து கொள்ள முடியாத பிரச்சனைகளே அதிகம். இந்த நிலையில் பூட்டின் – பைடன் சந்திப்பு ஒரு வெற்று நிகழ்வே!

**–தீக்கதிர்**

**7ம் பக்கத்தொடர்ச்சி...**

தாயாரிடம் அந்தப் பெண் வந்து சேர்ந்த சில நிமிடங்களில், திடீரென்று துப்பாக்கிக் குண்டு வெடித்த சத்தம் கேட்டது. அப்போது இரவு 1 மணி, ஒக்டோபர் மாதம் 9ந் திகதி, 1967 ஆம் ஆண்டு.

துப்பாக்கி சுடும் சத்தத்தைக் கேட்டு நடுங்கிப் போன அந்தப் பெண், அப்பள்ளிக்கூட இல்லத்திற்கு ஓடினாள். கைது செய்யப்பட்ட சே குவேரா வெறும் தரையில் இரத்த வெள்ளத்தில் சாய்ந்து கிடந்தார். அவருடைய கண்கள் அரைவாசி திறந்தும், அரைவாசி மூடியுமிருந்தன.

சே குவேராவைப் பற்றி இப்படிப்பட்ட செய்திகளைச் சேகரிக்கச் சேகரிக்க, நமது உடல் முழுவதும் புல்லரிப்பதை உணர முடிகிறது. அவர் இறந்தபோது அவருக்கு 39 வயதுதான்.

உலக நாடுகளே போற்றும் கியூபாவின் மருத்துவச் சேவையை உருவாக்கியவர் டாக்டர் சே குவேராதான் என்பதை நினைவுகூர்ந்து, கியூபாவின் தலைநகரான ஹவானாவில், சே குவேராவின் திருப்பெயரில் ஒரு பண்பாட்டு மையத்தை (Musolium) எழுப்பி, அதனைக் கியூபா நாட்டுக்கு அதிபர் பிடல் காஸ்ட்ரோ அர்ப்பணித்திருக்கிறார்.

சே குவேரா ஒரு மகத்தான தலைவர், மாவீரர். சோசலிசமே அவருடைய வேதம். சேவையே அவருடைய பொழுதுபோக்கு. வரலாறு, இலக்கியம், பொருளாதாரம், அரசியல், மருத்துவம் எனப் பல துறைகளிலும் சாகசம் புரிந்த வித்தகர்.

ஆர்ஜென்ரீனாவில் பிறந்து, தென்னமெரிக்க நாடுகளின் சுதந்திரத்திற்கான சூரியனாகக் கொதித்து உதித்தவர். புரட்சிக்காகத் தேச எல்லைகளைக் கடப்பதில் தமது கால்களுக்குக்கூட அவர் சிந்திக்கக் கற்றுத் தந்தவர். சே குவேராவைக் கணித முறையில் சுதந்திரத்திற்கான சூத்திரம் என்றே கூறலாம். அந்தச் செஞ்சூரியனுக்கு ஒருபோதும் அஸ்தமனமில்லை.

# மொழிப் பிரச்சினையும் தமிழ் கட்சிகளின் நிலைப்பாடும்

**மொ**ழிப் பிரச்சினை என்பது இலங்கையில் ஒரு நீண்டகாலப் பிரச்சினையாக இருந்து வந்துள்ளது. இப்பொழுது இலங்கையில் சிங்களத்துடன் தமிழும் அரச கரும மொழியாக ஏற்றுக் கொள்ளப்பட்டு இருந்தாலும், அந்த நிலையை அடைவதற்கு நீண்ட காலம் போராட வேண்டியிருந்ததை அனைவரும் அறிவர்.

மொழிப் பிரச்சினையால் இரண்டு பகுதியினர் இலாபம் அடைந்தனர். ஒரு தரப்பினர் சிங்கள இனவாத அரசியல்வாதிகள். மறு தரப்பினர் தமிழ் இனவாத அரசியல்வாதிகள். அதிலும் தமிழ் இனவாத அரசியல்வாதிகளே கூடுதலான இலாபம் ஈட்டினர். குறிப்பாக, தமிழரசுக் கட்சியினர் மொழிப் பிரச்சினையை வைத்தே தமது கட்சியை வளர்த்துக் கொண்டனர் எனவும் கூறலாம்.

இலங்கையில் மொழிப் பிரச்சினையைத் தொடக்கி வைத்தவர் ஐக்கிய தேசியக் கட்சியின் அபகீர்த்திமிக்க தலைவர்களில் ஒருவரான ஜே.ஆர்.ஜெயவர்த்தன தான். அவர் இலங்கை சுதந்திரம் அடைவதற்கு முன்னரே பிரித்தானியர் அமைத்திருந்த சட்டசபையில் ஒரு உறுப்பினராக இருந்த காலத்திலேயே இலங்கையின் ஆட்சி மொழியாகவும், பாடசாலைகளில் போதனா மொழியாகவும் சிங்களம் மட்டுமே இருக்க வேண்டும் என்றொரு தீர்மானத்தை சட்டசபையில் கொண்டு வந்தார். அன்றைய காலகட்டத்தில் இனவாதம் பெரிதாக மேலோங்கி இருக்காத காரணத்தால் அதிர்ஸ்ட்டவசமாக அவரது தீர்மானம் தோற்றுப்போனது.

**சுப்பராயன்**

பின்னர் 1956 பொதுத்தேர்தல் நடைபெறுவதற்கு சில மாதங்கள் முன்னதாக ஐ.தே.க. களனியில் நடத்திய மாநாட்டில் தமது கட்சி ஆட்சிக்கு வந்தால் சிங்களம் மட்டுமே அரசகரும மொழியாக இருக்கும் என்றொரு தீர்மானத்தை அதே ஜே.ஆரே முன்மொழிந்து மாநாட்டில் நிறைவேற்றப்பட்டது.

இதிலிருந்து ஓர் உண்மை புலனாகின்றது. அதாவது, பண்டாரநாயக்க 1956இல் ஆட்சிக்கு வந்து ‘தனிச் சிங்களம்’ சட்டத்தைக் கொண்டு வந்தாலும், அவர் ஆட்சிக்கு வராமல் ஐ.தே.க. ஆட்சிக்கு வந்திருந்தாலும், தனிச் சிங்களச் சட்டம் வந்திருக்கும். அதுமட்டுமல்ல, பண்டாரநாயக்க தனிச் சிங்களச் சட்டத்தைக் கொண்டு வந்தபோது ஐ.தே.க. அதை ஆதரித்தே வாக்களித்தது.



இதிலிருந்து மொழிப் பிரச்சினையில் ஐ.தே.கவின் கொள்கை என்னவென்பது தெட்டத்தெளிவாகிறது.

தனிச் சிங்களச் சட்டம் நாடாளுமன்றத்தில் கொண்டு வரப்பட்டபோது, இடதுசாரிக் கட்சிகளான இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியும், லங்கா சமசமாஜக் கட்சியும் அதை வன்மையாகக் கண்டித்ததுடன், எதிர்த்தும் வாக்களித்தன. தனிச் சிங்களச் சட்டம் சம்பந்தமாக கம்யூனிஸ்ட் கட்சியின் எதிர்வினையை கட்சியின் பருத்தித்துறை தொகுதி நாடாளுமன்ற உறுப்பினரான பொன்.கந்தையா தனது நீண்ட உரையின் மூலம் தெரியப்படுத்தினார்.

அதேபோல, “ஒரு மொழி என்றால் நாடு இரண்டாகும். இருமொழி என்றால் நாடு ஒன்றாகும்” எனத் தெரிவித்து மொழிப் பிரச்சினையில் லங்கா சமசமாஜக் கட்சியின் கொள்கையை அதன் தலைவர்களில் ஒருவரான டாக்டர் கொல்வின் ஆர்.டி.சில்வா தெளிவுபடுத்தினார். (பிற்காலத்தில் கொல்வினதும் அவரது சமசமாஜக் கட்சியினதும் கொள்கை மாறிவிட்டது உண்மையே)

தமிழரசுக் கட்சியும் தமிழ் காங்கிரஸ் கட்சியும் தனிச் சிங்களச் சட்டத்தை எதிர்த்திருந்தபோதிலும், அவர்களது தமிழ்மொழிப்பற்று அந்தரங்க சுத்தியானதா என்று ஐயப்பாடு இருக்கின்றது.

**தொடர்ச்சி 4ம் பக்கம் பார்க்க...**


# சமூகப் படுகொலையும், காணாமல் போய் விட்ட அரசும்

முரட்டுத்தனத்திடம் மட்டுமே முறையிடுகின்ற நிலைமையில் இருக்கின்ற மக்களுக்கு கிளர்ழ்ந்தெழுவது அல்லது அந்த முரட்டுத்தனத்திடம் முற்றிலுமாக அடங்கிப் போய் விடுவது என்பதைத் தவிர வேறு என்ன வழி இருக்கும் என்ற கேள்வியை ஃப்ரெட்ரிக் ஏங்கல்ஸ் எழுப்பியிருந்தார். மக்களை அழித்தொழிக்கின்ற தொனியையே தற்போது இந்தியாவில் நாம் காணும் காட்சிகள் கொண்டிருக்கின்றன. மருத்துவ வசதிகள் கிடைக்காமல் ஓர் உயிரை இழக்கும் போது மருத்துவமனை ஊழியர்களைத் தாக்குகின்ற குடிமக்கள், நடைபாதையில் ஒட்சிசன் சிலிண்டருடன் சுவாசிக்கப் போராடிக் கொண்டிருக்கின்ற குடிமக்கள் என்று இப்போது இந்தியாவில் பல மட்டங்களில் ஒரு நெருக்கடி நிலவி வருகிறது.

இந்த நெருக்கடியை ‘அமைப்பின் சரிவு’ அல்லது ‘அரசின் தோல்வி’ என்பதாக எடுத்துக் கொள்வதைக் காட்டிலும், தற்போதைய நெருக்கடிக்கு இந்த அரசு பொறுப்பல்ல என்பதாக அரசு ஆதரவாளர்களிடையே இருக்கின்ற உரையாடல்களே மிகவும் அதிர்ச்சியூட்டுபவையாக இருக்கின்றன. அந்த உரையாடல்கள் இந்தியாவிற்கான மிக மோசமான நேரத்தையே காட்டுகின்றன. இதுபோன்ற வாதங்கள் இந்திய ஜனநாயகத்தின் மீது மிகவும் மோசமான விளைவுகளையே ஏற்படுத்தப் போகின்றன.

தொழிலாளர்களின் வாழ்க்கைக்கான தேவைகளை நிறைவேற்றித் தராமல் அவர்களிடம் மிகக் கொடூரமான வேலை மற்றும் வாழ்க்கை நிலைமைகளை உருவாக்கி உடல்நலக்குறைவு மட்டுமல்லாது முன்கூட்டிய மரணங்களையும் அவர்கள் சந்திக்க வேண்டிய நிலைமையை ஆங்கிலேய ஆளும் வர்க்கமும், அரசும் உருவாக்கின என்ற கருத்தை ஏங்கல்ஸ் முன்வைத்தார். அதுபோன்று நடத்தப்பட்ட சமூகப் படுகொலையானது தனிநபர் ஒருவர் செய்யும் கொலையைப் போன்றதே என்று ஏங்கல்ஸ் கூறினார். அதில் இருக்கின்ற ஒரே வித்தியாசம் என்னவென்றால் சமூகப் படுகொலையைச் செய்பவர் தன்னை மறைத்துக் கொள்வதால், கொலை செய்தவரைக் காண முடியாத எவரொருவருக்கும் அந்த மரணம் இயற்கையானது என்றே தோன்றுகிறது.

அரசு பொறுப்பேற்றுக் கொள்ள முன்வராத நிலையில் இப்போது நம்மைச் சுற்றிலும்



அதைப் போன்றதொரு சமூகப் படுகொலை நிகழ்வதையே நாம் பார்த்து வருகின்றோம். இந்த தொற்றுநோய் தற்போதைய அலையில் மிகவும் பாதிக்கப்படக்கூடிய மக்களை மட்டுமே வேட்டையாடவில்லை என்பதே, தொழிலாளர் வர்க்கம் தொற்றுநோய்களால் பேரழிவிற்குள்ளானதாக 1840களில் இருந்த ஏங்கல்ஸின் இங்கிலாந்துக்கும், இப்போதைய இந்தியாவிற்கும் இடையே உள்ள ஒரே வித்தியாசமாக இருக்கிறது. இப்போது அந்த சமூகப் படுகொலை கண்ணுக்குத் தெரியாததாக இருக்கப் போவதில்லை.

*நிசிம் மன்னதுக்காரன்*

**அரசின் நடவடிக்கைகள்**

இந்தியாவில் தொற்றுநோயின் முதல் அலையின் போது நிகழ்ந்த சமூகப் படுகொலைக்கான சிறந்த எடுத்துக்காட்டாக மாநிலங்களுக்கு இடையிலே ஆயிரக்கணக்கான கிலோமீட்டர் தூரம் நடந்தே சென்றிருந்த இலட்சக்கணக்கான புலம்பெயர்ந்த தொழிலாளர்களின் துயர நிலை இருந்தது. அது யாருடைய கண்ணுக்கும் தெரியாமல்தான் இருந்தது. அத்தகைய கடினமான பயணத்தை தொழிலாளர்கள் தாங்களாகவே முன்வந்து மேற்கொண்டிருந்ததால் அவர்களே அதற்குப் பொறுப்பாவார்கள் என்று வாதிட்ட உரையாடல்கள் மூலம் அந்தப் படுகொலை நியாயப்படுத்தப்பட்டது. இப்போதும் இந்த இரண்டாவது அலையை உருவாக்கியதற்கும் மக்களே பொறுப்பாவார்கள் என்று கூறப்பட்டு வருகின்றது. ஆனால் கடந்த பிப்ரவரி மாதம் ‘கோவிட் –19 வெற்றிகரமாகத் தோற்கடிக்கப்பட்டது’ என்று பாரதிய ஜனதா கட்சி அதிகாரப்பூர்வமாக தீர்மானம் ஒன்றை நிறைவேற்றிக் கொண்டதன் மூலம் அந்த ‘வெற்றி’க்கான பொறுப்பு அவர்களால் பிரதமர் நரேந்திர மோடியின் தலைமையிடம் வழங்கப்பட்டதே தவிர மக்களிடம் அல்ல.

தங்களுடைய தவறுகளுக்கான பொறுப்பை நிபுணர்களின் ஆலோசனைகளைப் பெற முடியாத சாதாரண மக்களை ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொண்டவர்களாக இருந்த எட்டு கட்டமாக மேற்கு வங்கத்தில் தேர்தலை நடத்திய இந்திய தேர்தல் ஆணையம், கும்பமேளாவை நியாயப்படுத்திய உத்தரகண்ட் முதல்வர், கொரோனா வைரஸால் புதிதாக இரண்டு லட்சம் இந்தியர்கள் பாதிக்கப்பட்டிருந்த நாளில் மேற்கு வங்கத் தேர்தல் பேரணியில் கலந்து கொண்டவர்களின் எண்ணிக்கை குறித்து பெருமகிழ்ச்சியடைந்து போன பிரதமர் என்று அதிகாரத்திலிருப்பவர்களின் செயல்பாடுகள் அனைத்தும் அரசால் அனுமதிக்க முடியாத செயல்பாடுகளாகவே இருந்தன.

தன்னுடைய பொறுப்பை அரசு கை கழுவி விடுவதில் தானும் பங்கேற்றுக் கொள்வதன் மூலம் சமூகப் படுகொலைக்கான நிலைமைகளையே ஒருவர் வளர்த்தெடுக்க முயல்கிறார். அதுபோன்றதொரு செயலின் ஒரு பகுதியாகவே ஹிந்துக்களைப் பொறுத்தவரையில் பிணங்களைத் தகனம் செய்வது புனிதமான காரியம் என்பதால் அதனை ஊடகங்களில் காட்ட முடியாது என்று வைக்கப்படுகின்ற வாதம் இருக்கிறது. இறந்து போன ஹிந்துக்களின் உடல்களைத் தகனம் செய்வது தொலைக்காட்சிகளில் ஒளிபரப்பப்படுவதில்லை அல்லது பதிவு செய்யப்படுவதில்லை என்ற வெளிப்படையான பொய் ஒருபுறமிருக்க, மிக எளிதாக நோயாளிகளுக்கு ஒட்சிசனை வழங்கி அதன் மூலம் எத்தனை இறப்புகளைத் தடுத்திருக்கலாம், தங்களது அன்புக்குரியவர்களை வாகன நிறுத்துமிடங்கள் அல்லது நடைபாதைகளில் தகனம் செய்வதற்கான நிர்பந்தத்திற்கு மக்கள் ஏன்

உள்ளாகிறார்கள் என்பது போன்ற மிக முக்கியமான கேள்விகளும் இங்கே இருந்து வருகின்றன. இங்கே நடப்பவற்றை உலகிற்கு எடுத்துக் காட்டுவதைக் காட்டிலும் இதுபோன்று எழுப்பப்படுகின்ற கேள்விகள் கண்ணியமற்றவையா என்கிற கேள்வி பதிலுக்காகக் காத்து நிற்கிறது.

தொற்றுநோய் ஏற்படுத்தியிருக்கும் உண்மையான தாக்கத்தை மழுங்கடித்துச் சொல்வது பெரிய பேரழிவுக்கான ஆபத்தான பாதைக்கே வழிவகுக்கும் என்று தொற்றுநோயியல் நிபுணர்கள் கூறுகிறார்கள். சீன அரசு ஆரம்ப கட்டத்திலேயே தொற்றுநோயை மறைக்காது இருந்திருந்தால், இப்போதுள்ள இந்த இடத்தில் உலகம் நிச்சயம் இருந்திருக்காது. அதனால்தான் உலக ஊடகங்கள் அனைத்தும் இத்தாலி, ஈரான், அமெரிக்கா, ஐக்கியப் பேரரசு, பிரேசில், பெரு போன்று இறப்பு எண்ணிக்கை அதிகம் இருக்கின்ற இடங்களின் மீது தொடர்ந்து தங்களுடைய கவனத்தைச் செலுத்தி வருகின்றன. ஆனால் இந்தியாவிலோ நிகழ்ந்திருக்கும் துயரம் என்பது தொலைக்காட்சியில் ஒளிபரப்பக் கூடாத கலாச்சார விதிவிலக்காகச் சித்தரிக்கப்படுகிறது.

**மாறுபட்ட பாரம்பரிய ஆதிக்கம் (patrimonialism)**

ஆட்சியாளர் ஒருவர் பகுத்தறிவுசார் – சட்ட அதிகாரத்துவம் அல்லது தன்விருப்பற்ற விதிகளின் அடிப்படையில் உள்ள விதிகளுக்கு மாறாக, மிகப் பழமையான மரபுகளின் புனிதத்தின் அடிப்படையிலான பாரம்பரிய அதிகாரத்துவத்தைப் பயன்படுத்திக் கொள்வதை சமூகவியலாளர் மேக்ஸ் வெபர் பாரம்பரிய ஆதிக்கம் என்று விவரித்தார். அதன் தனித்துவமான போக்குகளை கடந்த ஏழு ஆண்டுகளில் இந்திய அரசு பெற்றிருக்கிறது. வழக்கமான மரபுவழி ஆதிக்கத்தைப் போல மிகவும் தனிப்பட்ட, மையப்படுத்தப்பட்டதாக இருக்கின்ற பரம்பரை, உறவுமுறைகள் அல்லது தனிப்பட்ட பற்றுறுதியை அடிப்படையாகக் கொண்டதாக இப்போதைய ஆட்சி இருக்கவில்லை. அதற்கு மாறாக மதப் பெரும்பான்மை, தேசியவாத சித்தாந்தம் ஆகியவற்றின் அடிப்படையில் தேர்தல் வெற்றிகளால் சட்டப்பூர்வமாக்கப்பட்டதாக அது இருக்கிறது. பணமதிப்பு நீக்கத்தால் கட்டவிழ்த்து விடப்பட்ட துயரத்தின் போது கடமை, தேசபக்தி போன்றவை இங்கே முக்கியமாக சொல்லப்பட வேண்டிய வார்த்தைகளாக்கப்பட்டு இருந்தன.

‘மை–பாப் சர்க்கார்’ என்று தன்னை பெருமைப்படுத்திக் கொண்டுள்ள, மக்களுக்கு கருணை காட்டுவதாக தன்னைக் காட்டிக் கொள்கின்ற இந்த பாரம்பரிய ஆதிக்க அரசு ஆக்சிஜன் சிலிண்டர்களை வாங்கிக் கொள்வதன் மூலமாகவோ அல்லது ஆம்புலன்ஸ்களை ஏற்பாடு செய்து கொள்வதன் மூலமாகவோ தங்களைத் தாங்களே கவனித்துக் கொள்ளுமாறு தன்னுடைய குடிமக்களை கேட்டுக் கொள்கின்ற வகையிலான நிறுவனமாக ஒரே இரவிற்குள் தன்னை மாற்றிக் கொண்டிருக்கிறது. வசதிகள் உள்ளவர்களுக்கு மட்டுமே உயிர்வாழ வாய்ப்பு உள்ளது என்ற சமூக டார்வினிசத்தை நோக்கியே அது சென்று முடிந்திருக்கிறது.

ஒருபோதும் ஆக்சிஜனுக்கு பற்றாக்குறை ஏற்படவே இல்லை என்ற மத்திய சுகாதார அமைச்சரின் கூற்றிலிருந்து தொடங்கி ஒட்சிஜன் வேண்டுமென்று கேட்பவர்கள் மீது முதல் தகவல் அறிக்கை (எஃப்.ஐ.ஆர்) தாக்கல் செய்கின்ற உத்தரபிரதேச அரசு, இறந்தவர்களால் திரும்பி வர முடியாது என்ற ஹரியானா முதல்வரின் கருத்து வரையிலும் பார்க்கும் போது, கணக்கில் வராதிருக்கின்ற மரணங்கள் குறித்து இங்கே விவாதிப்பதில் எந்தவொரு பொருளும் இருக்கப் போவதில்லை என்பது தெளிவாகிறது. இந்த கொரோனா வைரஸ் தொற்றுநோய்க் காலத்தில் தன்னுடைய கருணையை வெளிப்படுத்தியிருக்கும் அரசு குறித்து தோலுரித்துக் காட்டுபவையாகவே இதுபோன்ற கருத்துகள் இருக்கின்றன.

பொறுப்பேற்றுக் கொள்வதை உறுதி செய்வதே பாரம்பரிய ஆதிக்கத்தின் அடிப்படை சிக்கல்களில் ஒன்றாக இருக்கிறது என்று ஆய்வாளர்கள் அடையாளம் கண்டிருக்கின்றனர். தொற்றுநோய்க் காலத்தில் பாரம்பரிய ஆதிக்க நிலை காணாமல் போய் விடும் போது இந்த பொறுப்பேற்றுக் கொள்ளல் மிகவும் அப்பட்டமாகத் தேவைப்படுவதாக இருக்கின்றது. ஒருபுறத்தில் அரசின் ஆளுமை மற்றும் கருணையை வெளிப்படுத்தும் விதமாக ஆக்சிஜன் ஆலைகளுக்கான அனுமதி என்று தாமதமான நடவடிக்கையை மேற்கொண்ட பிரதமருக்கு அவரது அமைச்சரவையில் இருக்கின்ற அமைச்சர்கள் ஒட்டுமொத்தமாக நன்றியைத் தெரிவித்துக் கொண்டிருக்கிறார்கள். மறுபுறத்தில் இதுவரையிலும் கோவிட்–19 குறித்து ஒரு பத்திரிகையாளர் சந்திப்பைக்கூட நடத்தவில்லை என்ற அதிர்ச்சியூட்டும் உண்மையுடன் ஜனநாயகத்தின் தலைவராக பிரதமர் இருந்து வருகிறார்.

**குடிமக்களாக மாறுங்கள், பிரஜைகளாக அல்ல**

கோவிட்–19ஐக் கையாண்ட விதம் தொடர்பாக அண்மையில் ஸ்வீடன் பிரதமர் அரசியலமைப்புக் குழுவால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருக்கும் நிலையில், இந்திய அரசிடம் இன்றைய நெருக்கடிக்கு வழிவகுத்த அரசு முடிவுகளின் காலவரிசை குறித்த ஆய்விற்கு உத்தரவாதம் அளிப்பதற்கான எந்த வழியும் இருக்கவில்லை. ஆக்சிஜன் பற்றாக்குறையால் ஏற்பட்டிருக்கின்ற மரணங்கள் எந்தவிதத்திலும் இனப்படுகொலைக்குக் குறைவானவை அல்ல என்று கூறிய அலகாபாத் உயர்நீதிமன்றத்தின் கடுமையான வார்த்தைகளைக் கொண்டே நாம் இப்போதைக்குத் திருப்தியடைய வேண்டியிருக்கும்.

தன்னிடையே நடந்த, தன்னை எந்த வகையிலும் பாதிக்காத சமூகப் படுகொலையைக் காண முடியாது பைத்தியக்காரத்தனமான குருட்டுத்தனம் கொண்டு கண்ணை மூடிக் கொண்ட நிலையே வர்க்க முற்சாய்வு, முற்புனைவுக் கருத்துகளைக் கொண்டிருந்த ஆங்கிலேய ஆளும் வர்க்கத்திடம் இருந்தது என்று ஏங்கல்ஸ் கூறினார். தற்போதைய தொற்றுநோய் நிலைமையில் வேறுவிதமான முற்சாய்வு, முற்புனைவுக் கருத்துகள் கொண்டிருக்கும் இந்தியா தன்னுடைய பைத்தியக்காரத்தனமான குருட்டுத்தனத்தின் மூலம் அதுபோன்றதொரு சமூகப் படுகொலையையே அனுமதித்துக் கொண்டிருக்கிறது.

மக்கள் அனைவரும் இந்த பாரம்பரிய ஆதிக்க ஆட்சியின் கீழ் வெறும் பிரஜைகளாக மட்டுமே இருக்காமல் குடிமக்களாக மாறிட வேண்டும். அவ்வாறு மாறாவிட்டால் இந்திய ஜனநாயகத்திற்கான இருண்ட எதிர்காலத்தை இந்த தொற்றுநோயின் பேரழிவு மேகங்கள் முன்குறித்துக் காட்டுபவையாகவே இருக்கப் போகின்றன.

---

### விந்தை அறிந்திடு!

பஞ்சு காற்றிற் பறப்பானேன்?
பனங்காய் நிலத்தில் விழுவானேன்?
பிஞ்சு மாங்காய் புளிப்பானேன்?
பிறகு கனிந்து சுவைப்பானேன்?

கல்லு நீருள் அமிழ்வானேன்?
கப்பல் மட்டும் மிதப்பானேன்?
புல்லு மழையில் தளிர்ப்பானேன்?
பூக்கள் மலர்ந்து சிரிப்பானேன்?

பந்தை உருட்ட உருள்வானேன்?
பாறை அசையா திருப்பானேன்?
விந்தை பலவும் நிகழ்வானேன்?
விரும்பி நாங்கள் படிப்பானேன்?

விரும்பி நாங்கள் படிப்பதற்கே
விந்தை பலவும் நிகழ்கிறதாம்
கரும்பைத் தின்னப் பிடிக்காதோ?
கற்றுக் கொள்ளத் துடிக்காயோ?

–மஹாகவி உருத்திரமூர்த்தி

# பெருந்தொற்றிலும் விவசாயிகளின் போராட்டம் தொடர்கிறது

இந்தியா முழுவதிலும் கொரோனா என்னும் பெருந்தொற்று மிக வேகமாக பரவி வருகிறது. கொரோனா முதல் அலையைக் காட்டிலும் இப்போது இரண்டாவது அலை மிக வேகமாகவும் பல இலட்சம் மக்களை பாதிக்கக்கூடிய வகையிலும் இறப்புகளை அதிக அளவில் ஏற்படுத்தக்கூடிய வகையிலும் பரவி வருகிறது.

இந்த சூழ்நிலையில் தலைநகர் டெல்லியில் இந்த கொரோனாவின் தாக்கம் சற்று அதிக அளவிலேயே உள்ளது. இறப்புகளும் அதிகரித்து வருகின்றன. டெல்லி மாநில அரசு கொரோனாவைக் கட்டுப்படுத்த ஊரடங்கு தற்போது அமல்படுத்தியுள்ளது.

இந்த நிலையில் கடந்த 2020 நவம்பர் 27 முதல் 200 நாட்களுக்கு மேலாக தலைநகர் டெல்லியில் பல்வேறு மாநிலங்களைச் சார்ந்த விவசாயிகள் மத்திய பாரதிய ஜனதாக்கட்சி அரசு கொண்டுவந்துள்ள மூன்று வேளாண் சட்டங்களையும் திரும்பப் பெற வலியுறுத்தி சிங்கு, திக்ரி, காஜிபூர், ஷாஜகான்பூர் எல்லைகளில் கூடாரங்கள் அமைத்து தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டு வருகிறார்கள்.

அதே போல் நாடு முழுவதும் வேளாண் சட்டங்களை திரும்பப் பெற வலியுறுத்தி பல்வேறு மாநிலங்களில் விவசாயிகள் தொடர்ந்து போராட்டங்கள் இக்காலத்தில் நடத்தி வருகிறார்கள்.

### மத்திய அரசின் நெருக்கடி

மத்திய பா.ஜ.க அரசுடன் பலகட்டங்களாக விவசாயிகள் நடத்திய பேச்சுவார்த்தை தோல்வியில் முடிந்தன. மீண்டும் பேச்சுவார்த்தைக்கு தயார் என்று விவசாய சங்கங்கள் தெரிவித்துள்ளன. ஆனால் பிரதமர் மோடி அரசு பேச்சுவார்த்தைக்கு உரிய நடவடிக்கை எடுப்பதாக தெரியவில்லை. விவசாயிகள் போராட்டம் காரணமாக டெல்லியின் முக்கிய எல்லைப் பகுதிகள் தொடர்ந்து மூடப்பட்டு உள்ளன. வாகனங்கள் வேறு வழியாக திருப்பிவிடப்படுகின்றன.

கடந்த 7 மாதங்களாக நடைபெற்று வரும் விவசாயிகள் போராட்டத்தை எப்படியாவது தடுத்து நிறுத்த வேண்டும் என்று மத்திய அரசு பலவித கெடுபிடிகளைச் செய்து வருகிறது. இதுவரை போராட்டத்தில் 375 க்கும் அதிகமான விவசாயிகள் இறந்த போன




போதிலும் மனம் தளராமல் போராட்டத்தை தொடர்கின்றனர். கொரோனாவை விட மோடி அரசாங்கம் கொண்டுவந்துள்ள வேளாண் சட்டங்கள் ஆபத்தானவை. ஆனால் பா.ஜ.க அரசு போராடும் விவசாயிகளை கொரோனாவை விட ஆபத்தாகப் பார்க்கின்றது.

**கே.பி.பெருமாள்**

விவசாயிகள் போராடி வரும் இடத்திற்கு அருகாமையில் உள்ள மக்களில் சிலரை விவசாயிகளுக்கு எதிராக தூண்டிவிட்டது அரசாங்கம். ஆனால் தங்கள் அன்பால், அகிம்சையால் அவற்றை விவசாயிகள் எதிர்கொண்டனர். கடந்த ஏப்ரல் 15ந் திகதியன்று சிங்கு எல்லையில் விவசாயிகள் கூடாரங்கள் சமூக விரோதிகளால் தீ வைத்து கொளுத்தப்பட்டன.

அதிர்ஷ்டவசமாக உயிர் சேதம் எதுவும் ஏற்படவில்லை. விவசாயிகளின் போராட்டங்களை நேர்மையாக எதிர்கொள்ள முடியாத அரசு இவ்வாறு பல்வேறு நெருக்கடிகளை விவசாயிகளின் போராட்டத்திற்கு எதிராக செயல்படுத்தி வருகிறது.

### பொய்ப்பிரச்சாரம்

விவசாயிகளுக்கு அச்சத்தை ஏற்படுத்தும் பொருட்டு பலவகையான பொய்யான செய்திகள் பரப்பப்பட்டு வருகின்றன. விவசாயிகளின் தர்ணா போராட்டத்தை வலுக்கட்டாயமாக மாற்றுவது என்பதும் இதில் அடங்கும்.

டெல்லியின் எல்லைகளிலும், நாட்டின் பிற பகுதிகளிலும் போராடும் விவசாயிகள் முறையான பேச்சுவார்த்தைகளை ஒருபோதும் மறுக்கவில்லை. கொரோனா காலத்தில் பா.ஜ.க சில தேர்தல் பிரச்சார பேரணிகளை நடத்தியது. அதனால் கொரோனா பாதிப்பு அதிக அளவில் பரவும் என்பதை ஏற்க மறுக்கிறது. அதே சமயம் பா.ஜ.கவுக்கு எதிராக ஏதேனும் போராட்டங்கள் நடைபெற்றால் மோடி அரசு அதை மிகவும் கடுமையாகக் கையாள்கின்றது.

### ஆதரவு நடவடிக்கைகள்

நாடு முழுவதும் உள்ள அறிவுஜீவிகள்

பிரதமர் நரேந்திர மோடி மற்றும் மத்திய வேளாண் துறை அமைச்சர் நரேந்திர சிங் தோமர் ஆகியோருக்கு விவசாயிகள் போராட்டத்தை முடிவுக்கு கொண்டுவருமாறு கடிதங்கள் எழுதியுள்ளனர். அதன் ஒருபகுதி வருமாறு:

“மூன்று வேளாண் சட்டங்களும் விவசாயிகளுக்கு நெருக்கடியை அதிகரிப்பது மட்டுமல்லாமல் அவர்களின் வாழ்வாதாரத்திற்கு கடுமையான அச்சுறுத்தலையும் ஏற்படுத்தும்” மேலும் கடந்த 200 நாட்களுக்கும் மேலாக டெல்லியின் புறநகரில் திறந்த வெளியில் முகாமிட்டுள்ள பெண்கள், குழந்தைகள் முதியவர்கள் மற்றும் இளைஞர்கள் அடங்கிய இலட்சக்கணக்கான விவசாயிகளுக்கு மத்திய அரசின் பிடிவாதமான அணுகுமுறை உளவியல் மற்றும் உடல்ரீதியான துன்பங்களை ஏற்படுத்தி வருகிறது.

விவசாயிகள் பல சிக்கல்களை எதிர்கொள்கின்றனர். ஏற்கனவே 450 இற்கும் அதிகமானோர் இறந்துவிட்டனர். பல நூற்றுக்கணக்கானோர் தொடர்ந்து நடந்து கொண்டிருக்கும் போராட்டத்தில் காயங்கள் மற்றும் தடுப்புக்காவல்களால் பாதிக்கப்பட்டுள்ளனர். கடுமையான குளிர் காலத்தில் டெல்லி எல்லைகளில் தற்காலிக தங்குமிடங்களில் முகாமிடுதல் மற்றும் கோடையின் வெப்பத்தை தாங்குவது எளிதானது அல்ல.

இந்த போராட்டத்தில் விவசாயிகள், தொழிலாளர்கள் பெண்கள் மற்றும் இளைஞர்களின் நீண்டகால பொறுமை மற்றும் துன்பத்தை இது பிரதிபலிக்கிறது என்று அந்தக் கடிதத்தில் கூறப்பட்டுள்ளது. “தேசத்திற்கு உணவு பாதுகாப்பை வழங்கும் விவசாயிகளுக்கு நியாயமாக இருக்க வேண்டும்” என்று அரசாங்கத்திடம் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

முட்டுக்கட்டைகளை முடிவுக்குக் கொண்டு வருவதற்காக உடனடியாக விவசாயிகளின் தலைவர்களை அழைத்து ஒரு இணக்கமான தீர்வைக் காணுமாறு அரசாங்கத்தை வலியுறுத்தப்படுகிறது.

இதே போல் மேகலாயா கவர்னர் சத்தியபால் மாலிக் ஏப்ரல் 23 திகதியிட்ட கடிதத்தில் வேளாண் சட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் விவசாயிகளுக்கு ஒற்றுமையை வெளிப்படுத்தினார். முன்னதாக விவசாயிகளின் போராட்டத்தை கையாள்வதில் அவர்கள் தவறான பாதையில் இருப்பதாக பிரதமர் நரேந்திரமோடி மற்றும் மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா ஆகியோருக்கு தெரிவிக்க முயன்றதாக அவர் மேலும் கூறியுள்ளார். டெல்லியில் போராடும் விவசாயிகளுக்கு ஆதரவு தெரிவித்து பஞ்சாப் மாநிலத்திலிருந்து நூற்றுக்கணக்கான ஆசிரியர்கள் திக்ரி எல்லைக்கு வந்துள்ளனர்.

## பாதுகாப்பு

போராடும் விவசாயிகளுக்கு சமூக நல அமைப்புகள் மற்றும் மருத்துவர்களின் உதவியுடன் சுத்திகரிப்பான், முகக்கவசம் விநியோகித்தல் மற்றும் தடுப்பூசி போட ஊக்குவித்தல் ஆகியன போராட்ட களங்களில் செய்து வரப்படுகின்றன. திக்ரி எல்லையில் டாக்டர் சவாய்மான்சிங் தலைமையிலான குழு விவசாயிகளை அணுகி கொரோனா தொடர்பான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்குமாறு வலியுறுத்தியது.

திக்ரி, சிங்கூர் போராட்ட எல்லையில் தடுப்பூசி போடும் பணி வேகமாக நடைபெற்று வருகிறது. போராட்ட களத்தில் உள்ள விவசாயிகள் முதல் டோஸ் தடுப்பூசி பெரும்பாலும் போட்டுவிட்டனர். இரண்டாம் டோஸ் தடுப்பூசி கிடைப்பதில் சிரமம் உள்ளது என்று விவசாயிகள் தெரிவித்துள்ளனர். இதுகுறித்து அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அவர்கள் தெரிவித்தனர்.

சிங்கு எல்லையில் கஜாரியா டைல்ஸ் அலுவலகத்தில் முககவசங்கள் மற்றும் பிற அத்தியாவசிய பொருட்கள் விநியோகிக்கப்பட்டன. போராட்ட களத்தில் ஈடுபட்டிருக்கும் விவசாயிகள் சாலைகளின் ஒரு பக்கப்பாதையை திறந்து விட்டுள்ளனர்.

ஆனால் டெல்லி காவல்துறையின் தடுப்புகள் சாலையின் மறுபக்கத்தில் இன்னும் அகற்றப்படவில்லை. ஒட்சிசன், அம்புலன்ஸ் மற்றும் பிற அத்தியாவசிய சேவைகள் சீராக இயங்குவதற்காக சாலை திறக்கப்பட வேண்டும் என்று சம்யுக்தா கிசான் மோர்ச்சா மின்னஞ்சல் மூலம் முறையான கோரிக்கையை அரசுக்கு விடுத்துள்ளது.

## தேர்தல்

சமீபத்தில் நடந்து முடிந்த ஐந்து மாநில தேர்தல் முடிவுகளில் விவசாயிகள் மற்றும் தொழிலாளர்களின் கடும் கோபத்தின் விளைவுகளேயாகும். விவசாயிகள் சங்கத் தலைவர்கள் வாக்காளர்களுக்கு நன்றியை தெரிவித்துக் கொள்கின்றனர்.

அதே போல் அசாம் மாநிலத்தில் விவசாயிகள் சங்க தலைவர் அகில் கோகோய் நடந்து முடிந்த தேர்தலில் ஷிப்சாகர் தொகுதியில் வெற்றி பெற்றுள்ளார். பொய்யான குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் அரசாங்கத்தால் அவர் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். அரசாங்கம் அவரை உடனடியாக நிபந்தனையின்றி விடுதலை செய்திட வேண்டும் என்று சம்யுக்தா கிஷான் மோர்ச்சா வலியுறுத்தியுள்ளது.

கொரோனா பரவல் அச்சுறுத்தலை வைத்து மத்திய பிஜேபி அரசு டெல்லியில் போராடும் விவசாயிகளுக்கு எதிராக கடும் நடவடிக்கைகளையும், மிரட்டல்களையும் விடுத்து வருகிறது. வீட்டிற்கு செல்லுங்கள் இல்லையேல் கடும் விளைவுகளை சந்திக்க நேரிடும் என்று மத்திய அரசு மிரட்டி வருகிறது.

ஆனால் விவசாயிகளோ, கொரோனா என்னும் கொடிய கிருமியை விட, கொடூரமான கிருமியாக மூன்று வேளாண் சட்டங்கள் உள்ளன. நாங்கள் வீட்டிற்கு சென்றாலும் மூன்று வேளாண் சட்டங்கள் என்னும் கிருமி தாக்கி இறக்க நேரிடும்.

எப்படியோ நாங்கள் கொரோனா என்னும் கிருமியைச் சமாளித்து விடுவோம். ஆனால் எங்களால் மூன்று வேளாண் சட்டங்கள் என்னும் கிருமியைச் சாமாளிக்க முடியாது. எனவே மூன்று சட்டங்களையும் திரும்ப பெறும் வரை எங்கள் போராட்டம் தொடரும்.

‘டெல்லி எல்லையில் எங்கள் போராட்டம் தொடரும்! வேளாண் சட்டங்கள் வாபஸ் பெறும் வரை போராட்டம் தொடரும்!!’ என்று வீரம் செறிந்த போராட்டத்தை விவசாயிகள் இப்போது நடத்தி வருகிறார்கள். இந்த கொரோனா தொற்று காலத்திலும் போராடி வரும் விவசாயிகளுடன் நாமும் இருப்போம், இருக்க வேண்டும்.

---

அகிம்சை வேண்டியது தான். ஆனால் அதுவே எப்போதும் நல்ல கொள்கை ஆகிவிடாது. சில நேரங்களில் வன்முறை அவசியமே. ஒரு மனிதன் உன்னைக் கொல்ல வரும்போதும், ஒரு பெண்ணை மானபங்கப்படுத்த முயற்சிக்கும் போதும், திருடன் தப்பிக்க முயற்சிக்கும் போதும் வன்முறை நடந்தே தீரும்.

**–டாக்டர் அம்பேத்கர்**

# சீனாவின் சிங்கியாங்கில் வாழ்க்கை எவ்வாறு உள்ளது?



**2019** கோடை காலத்தில் தாய்வானைச் சேர்ந்த எமது குழு ஒன்று தொழில் சம்பந்தமான ஒரு மாதகால விஜயம் ஒன்றை சிங்கியாங்கின் ரேபானுக்கு (Turpan, Xinjiang) மேற்கொண்டது. அங்கு பல தடவைகள் சென்று வந்த எனது கூட்டாளிகள் கூறியதின்படி, ஹான் (Han) இனத்தவர்களுக்கும் உய்குர் (Uyghur) இனத்தவர்களுக்கும் இடையிலான சூழலும் விதிகளும் கடந்த சில வருடங்களாக ஆழமான மாற்றத்தை அடைந்துள்ளது.

நாம் சென்ற வேளையில் அங்கு மிதமான அமைதி காணப்பட்ட அதேவேளை, சாதாரண நகரங்களில் காண்பதைவிட பாதுகாப்பு நிலைமை சற்றுக் கூடுதலாக இருந்தது. சில பொலிசார் தம்முடன் துப்பாக்கிகளை வைத்திருந்தனர். பொது மற்றும் தனியார் உடமைகளைச் சுற்றியும் பூங்காக்கள், ஹோட்டல்கள், வாகனத் தரிப்பிடங்கள் என்பனவற்றைச் சுற்றியும் உலோகத்தாலான வேலிகள் அமைக்கப்பட்டிருந்தன. மூன்று வருடங்களுக்கு முன்னர் இவைகள் அமைக்கப்பட்டதாகத் தெரிய வந்தது.

ஹோட்டல்கள், அங்காடிகள் என்பனவற்றுக்குள் செல்லும்போதும், அல்லது உங்கள் பிள்ளைகளை விளையாடுவதற்காக பூங்காக்களுக்கு அழைத்துச் செல்லும் போதும் உங்கள் அடையாள அட்டைகளும் கைப்பைகளும் சோதனையிடப்படும். அத்துடன் இவை எல்லாம் இரவில் மூடப்பட்டிருக்கும். தெருவோர உணவுக்கடைகள் கூட மூடப்பட்டிருக்கும். இது சற்றுச் சிரமமாக இருந்தபோதிலும், மற்றைய எல்லா சீன நகரங்களில் உள்ள புகையிரத நிலையங்களில் காணப்படும் பாதுகாப்பு நடைமுறைகளே இங்கும் காணப்படுகிறது. இந்த நடைமுறைக்கு உள்ளூர்வாசிகள் ஒத்துழைப்பதுடன், தீவிரவாதிகளின் தாக்குதலில் இருந்து பாதுகாப்புப் பெறுவதற்கு இது தேவை என உள்ளூர்வாசிகளும் சுற்றுலாப் பயணிகளும் கருதுகின்றனர்.

எரிபொருள் நிலையங்களுக்கு பாதுகாப்பு வழங்கப்படுவதுடன், அடையாள அட்டைகளும் வாகனமும் சோதனை செய்யப்பட்டு, ஒருவர் மட்டும் எரிபொருள் நிரப்புவதற்காக உள்ளே அனுமதிக்கப்படுகின்றார். ஏனையோர் எரிபொருள் நிலையத்துக்கு வெளியே வீதி ஓரத்தில் காத்திருக்க வேண்டும். இது 45 செல்சியஸ் வெப்பநிலை கொண்ட சிறிது சிரமமான காலம். இந்த நிலைமையில் பாதுகாவலர்கள் தினமும் வாசலகளில் நின்று தமது கடமைகளைச் செய்வதென்பது கற்பனை செய்ய முடியாத நிலைமை.

**வெய் நியென் (Wei Nien)**

நகரங்களுக்கு உள் செல்லும் வெளிச்செல்லும் நெடுஞ்சாலைகளிலும், வீதிச் சந்திப்புகளிலும் பொலிசாரின் சோதனைச் சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன. ஆனால் கமராக்களும் முக அடையாள தொழில்நுட்பமும் உள்ளதால் நெடுஞ்சாலைப் பயணம் இலகுவாக உள்ளது.

இது எனக்கு 2013இல் நான் திபெத்துக்குச் சென்றபோது அங்கிருந்த பாதுகாப்பு நிலைமையை நினைவுபடுத்தியது. ஆனால் இது என்னை பயமுறுத்தியதாகவோ அல்லது மிரட்டியதாகவோ நான் உணரவில்லை. திபெத்தில் சில வருடங்களுக்கு முன்னர் இருந்த அரச தலைவரே இப்பொழுதும் இருப்பதாகக் கேள்விப்பட்டேன். அவரது கொள்கை அங்கு தாக்கத்தை ஏற்படுத்தியது. இந்த வகையான பாதுகாப்பு நடைமுறைகள் அமுலில் இருக்கும்போது கிளர்ச்சியாளர்களினால் கூடுதலான சேதங்களை உண்டுபண்ணுவது சற்றுக் கடினம் எனக் கருதுகிறேன்.

சாதாரண உய்குர் இனத்தவர்களும், உய்குர் அல்லாதவர்களும் நல்ல முறையில் நாளாந்த வாழ்க்கையைக் கொண்டு நடத்துவதாக எல்லோரும் கூறினர். நாம் சென்ற முஸ்லீம் உணவகங்கள் அருமையாக இருந்தன. எம்மீது அவர்கள் எவ்விதமான வெறுப்பையும் காண்பிக்கவில்லை. சில வேளைகளில் நான் தனியாக உணவருந்தச் சென்ற வேளைகளில் அவர்களுடன் ஒரே மேசையில் அமர்ந்து மண்டரின் மொழியில் உரையாடும்போது சாப்பாட்டுப் பட்டியலில் உள்ள நல்ல உணவு வகைகள் எவையென்பதை அவர்கள் எனக்கு ஆலோசனையாகக் கூறுவார்கள்.

நான் வேலையில் ஈடுபட்டு இருந்ததால் அதிகமான புகைப்படங்களை எடுக்க முடியவில்லை. ஆனாலும் சிலவற்றை எடுக்கக்கூடியதாக இருந்தது.

---

முதலாளித்துவ சமுதாயத்தில் சுதந்திரம் எப்போதுமே பண்டைய கிரேக்க குடியரசுகளில் இருந்ததைப் போலவே உள்ளது. அதாவது அடிமை உரிமையாளர்களுக்கான சுதந்திரம். பணத்தின் சக்தியை அடிப்படையாகக் கொண்ட ஒரு சமூகத்தில் உண்மையான மற்றும் பயனுள்ள ‘சுதந்திரம்’ இருக்க முடியாது. சமூகத்தில் உழைக்கும் மக்கள் வறுமையில் வாழ்கின்றனர். அதேவேளை ஒரு சில பணக்காரர்கள் ஒட்டுண்ணிகளைப் போல வாழ்கின்றனர்.

**–லெனின்**

**முன்பக்கத்தொடர்ச்சி...**

இலங்கையில் இடதுசாரி சக்திகள் பிளவுபட்டும் பலவீனப்பட்டும் போயிருப்பதுதான்.

இலங்கையில் முதல் தோன்றிய அரசியல் கட்சி *1935*இல் உருவான இடதுசாரிக் கட்சியான லங்கா சமசமாஜக் கட்சிதான். அந்தக் கட்சி தோன்றி வெகுகாலத்துக்குப் பின்னர்தான் இதர கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சி, சிறீலங்கா சுதந்திரக் கட்சி, அகில இலங்கை தமிழ் காங்கிரஸ், இலங்கை தமிழரசுக் கட்சி, இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், ஜே.வி.பி., சிறீலங்கா முஸ்லீம் காங்கிரஸ் போன்ற கட்சிகள் தோற்றம் பெற்றன.

ஆனால் துரதிஸ்ட்டவசமாக சமசமாஜக் கட்சிக்குள் உருவான ஸ்டாலினிய — ரொட்ஸ்கிய தத்துவார்த்த முரண்பாடு காரணமாக அந்தக் கட்சிக்குள் பிளவு ஏற்பட்டு *1943*இல் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி உருவானது. இந்தப் பிளவு ஏற்பட்ட பின்னர் இடதுசாரிக் கட்சிகளின் மக்கள் மீதான அக்கறை தேய்ந்து இரு பகுதியினரும் ஒருவர் மீது ஒருவர் சேறு பூசுவதிலேயே காலத்தைக் கழித்தனர்.

அவர்களது மார்க்சியத்துக்கு விரோதமான குறுகிய அரசியல் பார்வை காரணமாகவும், ஒருமுனைவாத செயல்பாடுகள் காரணமாகவும் சமசமாஜக் கட்சிக்குள்ளும், கம்யூனிஸ்ட் கட்சிக்குள்ளும் மேலும் மேலும் பல பிளவுகள் ஏற்பட்டு இன்று இரு அணியினருமே மிகவும் பலவீனப்பட்டுப்போய் உள்ளதுடன், பொதுஜன பெரமுனை அல்லது சிறீலங்கா சுதந்திரக் கட்சி என்பனவற்றின் தயவில் வாழவேண்டிய நிலையில் இருக்கின்றனர்.

ஒரு காலத்தில் ஒன்றுபட்ட இடதுசாரி இயக்கமாக இருந்த நேரத்தில் இலங்கையின் தொழிலாளி வர்க்கத்துக்கும் பொதுமக்களுக்கும் பெற்றுக் கொடுத்த உரிமைகளில் ஒரு வீதத்தைத் தன்னும் இன்று பெற்றுக் கொடுக்கக்கூடிய நிலையில் இடதுசாரி இயக்கம் இல்லாதது துரதிஸ்ட்டமே.

ஒன்றுபட்ட இயக்கமாக இயக்கமாக இடதுசாரிகள் செய்த சாதனைகளை நாட்டின் தற்போதைய பிரதமரான மகிந்த ராஜபக்ஸவே அண்மையில் வெளிப்படையாகப் பாராட்டியிருந்தார். சீன கம்யூனிஸ்ட் கட்சியின் *100*ஆவது ஆண்டுப் பூர்த்தி சம்பந்தமாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இணையவழி நிகழ்வொன்றில் பேசிய பிரதமர் மகிந்த ‘கடந்த காலத்தில் இடதுசாரிகள் மேற்கொண்ட போராட்டங்களின் பெறுபேறாகவே மக்கள் இன்று பல உரிமைகளை அனுபவிக்கிறார்கள்’ என வெளிப்படையாகவே குறிப்பிட்டிருந்தார்.

இதன் அர்த்தம் என்னவெனில், இடதுசாரிகள் மீண்டும் ஐக்கியப்பட்டு மக்களுக்காகப் போராட வேண்டும் என்பதாகும். ஆனால் ஒரு முதலாளித்துவ ஆளும் கட்சியின் தலைவரும் பிரதமருமான ஒருவருக்கு விளங்கும் இந்த உண்மை பழம்பெரும் இடதுசாரி இயக்கங்களுக்கு இன்னமும் புரியாமல் இருப்பதுதான் கவலையான விடயம்.

பிரதமர் மகிந்தவின் கருத்துக்கு இன்னொரு அரத்தமும் உள்ளது. அதாவது இன்றைய அரசு பெரும்பாலும் தேசிய முதலாளித்துவத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஓரளவு ஏகாதிபத்திய எதிர்ப்பு தேசபக்த அரசாக இருந்தாலும், அதனால் தனித்து நின்று நாடு எதிர்நோக்கும் சவால்களுக்கு முகம் கொடுக்க முடியாது என்பதே அது. அதனால் பலம் பொருந்திய இடதுசாரி இயக்கமொன்றின் உதவி இன்றைய அரசுக்குத் தேவைப்படுகின்றது என்பதே அவரது உரையின் இன்னொரு அர்த்தம்.

எனவே, இன்று மிகவும் அவசரமாகவும் அவசியமாகவும் தேவைப்படுவது பலம் பொருந்திய ஒரு இடதுசாரி இயக்கத்தின் மீள் எழுச்சியே. உடனடியாக அப்படியான ஒரு நிலையை உருவாக்க முடியாவிட்டாலும், குறைந்தபட்சம் ஒரு விரிவான வேலைத்திட்டத்தின் அடிப்படையில் நாட்டிலுள்ள அனைத்து இடதுசாரிக் கட்சிகளும் குழுக்களும் ஒரு ஐக்கிய முன்னணியாகத் தன்னும் இணைந்து வேலை செய்வது அவசியமாகும்.

இந்த உண்மையை அனைத்து இடதுசாரி சக்திகளும் புரிந்துகொண்டு செயலில் இறங்க வேண்டும்.

---

“நமது தத்துவமானது வறட்டுச் சூத்திரவாதம் அன்று. ஒரு செயலுக்கான வழிகாட்டியாகும்” என்று மார்க்சும், எங்கெல்சும் எப்போதும் கூறிவந்ததுடன் “விதிகளை மனனம் செயவதும், அவற்றினைத் திரும்பத்திரும்பக் கூறுவதும், பொதுவான கடமைகளைப் பற்றிக் கூறுவதற்கே தகுதியுள்ளன” என்று சரியான விதத்தில் அவர்கள் பரிகசித்துமுள்ளனர்.

**—லெனின்**

---

**5ம் பக்கத்தொடர்ச்சி...**

ஒன்றாயிற்று. சைவம் மேனிலை எய்திய பிற்காலச் சோழர் ஆட்சியிலும் மடங்கள் செழித்து வளர்ந்த காலத்திலும் வருணாசிரம தருமமே தலையாய தருமமாகப் பேணப்பட்டது.

எனவே மக்களது அபிலாசை மீண்டும் தலைதூக்குகிறது. இம்முறை, சம்பிரதாயங்களையும் சடங்குகளையும் எதிர்த்துக் குரல் எழுப்பிய சித்தர்கள் சாதியெதிர்ப்பையும் தமது கொள்கையில் இணைத்துக் கொண்டனர். ஆனால் சமூகத்திலிருந்து ஒதுங்கி, புறவாசிகளாக – வெறும் கண்டனவாதிகளாக மட்டும் – சித்தர்கள் வாழ்ந்தனர். மக்களது அபிலாசைக்கு ஆக்கபூர்வமான உருக்கொடுத்து எதிர்ப்பை நடைமுறை இயக்கமாக நெறிப்படுத்தும் ஆற்றலும் அறிவும் அவர்களிடம் இருக்கவில்லை. தமக்குப் பிடிக்காத சமுதாயத்திலிருந்து தாமாகவே விலகிக்கொண்டனர். அவ்வளவில் அவர்கள் எதிர்ப்பு நின்றது. அந்தளவிலேயே அவர்கள் மக்களைக் கவர்ந்திருந்தமையை நோக்குமிடத்து மக்கள் இன்னும் முன்னேறத் தயாராயிருந்தமை புலப்படுகிறது. இன்னொன்று, சித்தர்கள் சமுதாய உணர்வு நிறைந்தவராய் இருந்தும் அவர்களது “தத்துவம்” சமய சம்பந்தமானதாயும் – அகநிலைப்பட்டதாயும் குறுகிய வரம்புக்குள் அமைந்தது. எனவே ஒரு குறிப்பிட்ட எல்லைக்கு அப்பால் அதன் செல்வாக்கு இயங்கமுடியாது போயிற்று.

இந்த வரலாற்று உண்மை சற்று ஆழமாக நோக்கத்தக்கது. ஏனெனில் சமயப் போர்வையிலேயே இதுகாலவரை சாதிப் பிரச்சினை நோக்கப்பட்டு வந்தமையால், மிகச் சமீப காலம் வரை – அதாவது நவீன காலப் பகுதயிலும் பலர் சமய அடிப்படையில் இப்பிரச்சினைக்கு விடிவுகாண எண்ணினர். கிறித்தவம், பௌத்தம் முதலிய சமயங்களைச் சேர்வதால் சாதிப் பிரச்சினைக்குத் (தம்மளவிலே) தீர்வு காண்பதாகப் பலர் கருதியிருக்கின்றனர்.

(இந்தக் கட்டுரை 1969ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்க மாநாட்டின் போது வெளியிடப்பட்ட சிறப்பு மலரிலிருந்து எடுக்கப்பட்டதாகும். இந்தக் கட்டுரையை எழுதிய “அம்பலத்தான்” பெரும்பாலும் காலஞ்சென்ற பேராசிரியர் க.கைலாசபதி அவர்களே என்பது பலரின் கருத்தாகும்.)

'Vaanavil' is a registered member of the National Ethnic Press and Media Council of Canada
வானவில்

# இலங்கை பற்றி பிரித்தானிய பாராளுமன்றத்தில் நேஸ்பி பிரபு நிகழ்த்திய உரையின் முக்கியமான பகுதிகள்

**ஐக்கிய இராச்சிய பாராளுமன்றத்தில் கடந்த மே 19ந் திகதி நடைபெற்ற ராணியின் உரை விவாதத்தின் போது, அனைத்துக் கட்சிக் குழுவின் (இலங்கை) இணைத் தலைவராக இருக்கும் மைக்கேல் நேஸ்பி பிரபு, 2009 இல் ஆயுத மோதல் முடிவுக்கு வந்தபின்னர் நல்லிணக்கத்தை அடைவது குறித்த இலங்கையின் சவால்கள் மற்றும் முன்னேற்றம் தொடர்பான முக்கியமான உள்ளார்ந்த உண்மைகளைப் பகிர்ந்து கொண்டார். அவரது உரையின் சில பகுதிகள் கீழே தரப்பட்டுள்ளன:**

எனது பிரபுக்களே, மேன்மைதங்கிய உரையை நான் வரவேற்கிறேன். எனது விமர்சனங்கள் உலகளாவிய

பிரித்தானியா பற்றி குறிப்பாக இந்தோ – பசுபிக் கூடாரம் பற்றி இருக்கும். நான் இந்தியா, பாகிஸ்தான், சிறீலங்கா ஆகிய நாடுகளில் வாழ்ந்து வேலை செய்ததின் காரணமான எனது சொந்த பின்னணி காரணமாகவும் மற்றும் ஆசியாவின் இதர பகுதிகள் பற்றியும் நான் நன்கு அறிவேன். சிறீலங்கா சம்பந்தமான அனைத்துக் கட்சி இணைத்தலைவர் என்ற வகையில் விசேடமாக சிறீலங்கா பற்றி உரையாற்ற உள்ளேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அமெரிக்கா வெளியே போயுள்ள நிலையில் பிரித்தானியா தலைமைப் பொறுப்பு வகித்த மூலக்குழு ஒன்றினால் இலங்கை இராணுவம் இழைத்த போர்க் குற்றங்கள் சம்பந்தமாக ஐ.நா. மனித உரிமைப் பேரவையில் முன்வைத்த குற்றச்சாட்டுகள் சம்பந்தமாக இலங்கையில் இன்று பெரும் பதட்டம் உருவாகியுள்ளது.

2009 யுத்தம் என்பது ஒரு சிறிய கலகமல்ல. எனவே சர்வதேச மனிதாபிமானம் என அறியப்படும் ஆயுத மோதல் சம்பந்தமான அடிப்படையில் மதிப்பீடுகள் கட்டாயமாக அமைய வேண்டும். இந்த யுத்தம் ஜனநாயக ரீதியாக தெரிவு செய்யப்பட்ட ஒரு அரசாங்கத்துக்கும் இரண்டு



ஜனாதிபதிகள், அமைச்சர்கள், ஆயிரக்கணக்கான பொதுமக்கள், பல மிதவாதத் தமிழ் தலைவர்கள் ஆகியோரைக் கொலை செய்த உலகின் மிகவும் பிசாசுத்தனமான பயங்கரவாதிகளுக்கும் இடையில் நடைபெற்ற ஒன்றாகும்.

இந்த யுத்தம் பிரித்தானியப் பிரசையான அன்ரன் பாலசிங்கத்தால் தலைமை தாங்கப்பட்ட லண்டன் கம்டனில் உள்ள தமிழ் புலிகளின் சர்வதேச தலைமைக் காரியாலயத்தால் நடத்தப்பட்டதாகும். அவரது மனைவி அடேல் சிறீலங்காவில் போரிட்டதுடன், யுனிசெஃப் குறிப்பிட்ட 5,000 குழந்தைப் போராளிகளை இணைப்பதிலும் நெருக்கமாகச் சம்பந்தப்பட்டவராவார். இந்த யுத்தக் குற்றத்தை எந்த அளவுகோல் கொண்டும் அளக்க முடியாது.

ஐ.நாவால் முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுகள் ஒருபோதும் சிறீலங்காவுக்கு விஜயம் மேற்கொள்ளாத மூன்று மனித உரிமை சட்டத்தரணிகளில் ஒருவரான டருஸ்மன் அறிக்கையிலிருந்து ஆரம்பிக்கப்பட்டது. மிக மோசமானது என்னவெனில் அவர்கள் 40,000 பொதுமக்கள் கொல்லப்பட்டது எனக் கூறியதுதான். ஆனால் 20 வருடங்களாக எல்லா உண்மைகளும் மறைக்கப்பட்டு வந்துள்ளன. இது ஒரு திடமான ஆதாரமா? ஏன் இந்த ஒளிவுமறைவு?

OISL இடம் இருந்து வந்த ஐ.நாவின் இரண்டாவது அறிக்கை டருஸ்மனை பெரும்பாலும் அடிப்படையாகக் கொண்டது. நான் மூன்று வருடங்கள் செலவழித்து எல்லாவற்றையும் ஆராய்ந்து இலங்கை பற்றிய “இழக்கப்பட்ட சொர்க்கமும் மீளப் பெறப்பட்ட சொர்க்கமும்” என்ற எனது நூலில் பட்டியலிட்டுள்ளேன். அதன் பிரதியொன்றை எனது மதிப்புக்குரிய நண்பருக்கு அனுப்பினேன். அவர் அதைப் பெற்றாரோ யானறியேன். ஏனெனில் அவர் இதுவரை அதைப்பற்றி என்னிடம் எதுவும் கூறவில்லை. இனப்படுகொலை சம்பந்தப்பட்ட குற்றச்சாட்டைப் பொறுத்தவரையில், ஆகக்கூடுதலாக 6,000 முதல் 7,000 பேர் வரையானவர்களே இறந்திருப்பார்கள் என்பதுதான் எனது உறுதியான முடிவாகும்.

எனது சான்றுகளை ஆராய்ந்து பார்த்தால் அங்கு ஒரு இனப்படுகொலை நடைபெறவில்லை என்பது தெரியவரும். எனது சான்றுகள் அமெரிக்கத் தூதுவர் பிளேக், சிறீலங்காவில் இருந்த ஐ.நா. குழு, யுத்தத்தின் பின் தமிழர்களால் மேற்கொள்ளப்பட்ட கணக்கெடுப்பு, மனித உரிமைகளுக்கான பல்கலைக்கழக ஆசிரியர்கள், இத்துறையிலிருந்த பிரித்தானியாவின் சொந்த இராணுவ நிபுணர் மற்றும் பலரிடமிருந்து பெறப்பட்டவையாகும். அவர்கள் எல்லோரும் இறந்தவர்களின் தொகை 6,000 முதல் 7,000 வரைதான் என உறுதிப்படுத்தியுள்ளனர்.

உண்மையும் நல்லிணக்கமும் ஒரு பெரிய சவாலாக உள்ளன. இலங்கைக்கு *2019* இல் விஜயம் செய்த வணக்கத்திற்குரிய உயர்திரு ஆர்ச் பிஷப் கேன்டர்பரி, இலங்கை உண்மையான முன்னேற்றத்தை அடைந்து வருவதாகக் கூறியுள்ளார்.